# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 10.10.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# வட, கிழக்கில் 20 ஆம் திகதி ஹர்த்தால்

## கூட்டமைப்புக்குள் பாரிய பிளவு

### புதிய கூட்டணியை உருவாக்கும் பங்காளிக் கட்சிகள்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற உத்தேசித்துள்ள மூன்று பிரதான பங்காளிக் கட்சிகளும் புதிய கூட்டணியை உருவாக்க தீர்மானித்துள்ளன.

ஆர்.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து செல்வம் அடைக்கலநாதனின் டெலோ, டி.சித்தார்த்தன் தலைமையிலான புளொட் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கட்சி ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகள் இலங்கை தமிழரசுக் கட்சியின் மீது கடும் அதிருப்தியில் உள்ளன.

இந்நிலையிலேயே, ஆர்.சம்பந்தன் தலைமையிலான

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் கட்சிகள் அழைப்பு



வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியானமை தொடர்பில் முழுமையான நீதிவிசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக் குள்ளாகுவதை கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து

02 ஆம் பக்கத்தில்...



செங்கலடி மத்தியகல்லூரி தேசிய பாடசாலைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க சம்பவதிரட்டுப்புத்தகத்தில் கையொப்பம் இடுவதை படத்தில்காணலாம். அருகில் ரணில் 2024 செயலணியின் தலைவர் க. மோகனும் காணப்படுகின்றார்.

## மனித சங்கிலி போராட்டம் தோல்வியுற்றதும், ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுகிறார்கள்

மனித சங்கிலி போராட்டம் தோல்வியுற்றதும் தமிழ் கட்சிகள் இணைந்து ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுகிறார்கள் என சமூக செயற்பாட்டாளர் மைக்கல் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

தற்போதைய சூழ்நிலையில் சகல தமிழ் கட்சிகளும் இணைந்து ஒரு கர்த்தால் போராட்டத்தினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளன.

கடந்த வாரம் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து

02 ஆம் பக்கத்தில்...

## கருணாவை பிரித்தது போல தமிழ் கட்சிகளைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் முயற்சி

யுத்த காலத்தில் கருணாவை பிரித்தது போல தற்பொழுது இருக்கின்ற தமிழ் கட்சிகளைப் பிரிக்கின்றது போன்று ஜனாதிபதி ரணில் செயற்பட்டு வருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## எரிபொருள் விலைகள் மீண்டும் உயர்வடையும்

இஸ்ரேல்-ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கி உள்ளது.

இதனால் இலங்கையில் மீண்டும் எரிபொருள்

02 ஆம் பக்கத்தில்...

## சட்டத்தின் ஆட்சி சரித்திரத்தில் மட்டுமே

### உடனடி தீர்வு அவசியம்!

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல் வந்திருக்கின்ற நிலையில் தற்போது அது உச்ச நிலையை அடைந்திருக்கின்றதாக

02 ஆம் பக்கத்தில்...




## ரணிலின் பதவிக்காலத்தை மேலும் ஒருவருடம் நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு: ரணில் - பசில் ரகசிய பேச்சு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிக்கொண்டவர் என்ற பெருமையுடன் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட முடியாத பட்சத்திலேயே இந்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில், அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பசில் ராஜபக்சவும்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஒய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302



Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 | 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தினால் பசுக்கள் வழங்கி வைப்பு



தேசத்துக்கோயிலான கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினரால் வறுமையான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பசுக்கள் வழங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று(07) இடம்பெற்றது.

வறுமையான குடும்பத்திற்கு ஒரு பசு என்ற வேலைத்திட்டத்தின் கீழ், குறித்த ஆலயத்திற்கு நேர்த்தியாக வந்த பசுக்களை வழங்குகின்ற முதலாம் கட்ட ஆரம்ப நிகழ்ச்சியின் போது, படுவான்கரைப்பிரதேச எல்லைக்குட்பட்ட மண்முனை மேற்கு, போரதீவுப்பற்று, ஏறாவூர்ப்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆறு பேருக்கு ஒவ்வொரு பசுவீதம் வழங்கி வைக்கப்பட்டன.

வண்ணக்கர் தலைவர் இ.மேகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஏனைய வண்ணக்குமார்கள், நிருவாகசபை அங்கத்தவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் பயங்கரவாத மற்றும் நிகழ் நிலை காப்புசட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்






(கனகராசா சரவணன்)

இலங்கை அரசு உடனடியாக அடக்குமுறை சட்டவரைகளான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ் நிலை காப்புச் சட்டம் மீளப்பெறவேண்டும் என கோரி எதிர்ப்பு தெரிவித்து கல்லடிப் பாலத்தில் இருந்து காந்தி பூங்காவரையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (9) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் கல்லடி பாலத்திற்கு அருகாமையில் ஒன்றிணைந்தனர்.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதிவேண்டும், அனைத்து மனித ஊரிமை மீறல்களுக்கு பொறுப்பு கூறலை உறுதிபடுத்து, நிகழ் நிலை காப்புச்சட்டத்தை முன்மொழிவதை மீளப்பெறு, ஊடகத்திற்கு சுதந்திரம் மற்றும் சுயாதீனம் வேண்டும், தகவல்களை அறிவதற்கும் கருத்து சுதந்திரத்திரம் எங்களது அடிப்படை உரிமையாகும்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைபை மீளப்பெறு, சமூகவலைத் தளங்களை பயன்படுத்துவது எங்களது சுதந்திரத்தை உங்களால் மட்டுப்படுத்தமுடியாது, போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வீதி ஊடாக அரசடி சந்தியையடைந்து அங்கிருந்து பொலிஸ் தலைமையக நிலைய வீதி சுற்று வட்டத்தையடைந்து காந்திபூங்காவை சென்றடைந்து

பின்னர் அங்கு கோஷங்கள் எழுப்பியவாறு பகல் 12 மணிவரையில் சுமார் ஒருமணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்காரர்கள் கிழக்கு மாகாண சிவில் சமூகத்தினுடைய வேண்டுகொள் இந்த பயங்கரவாத மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டங்களை இல்லாமல் செய்யுமாறு அரசாங்கத்திரடம் கோரிக்கை விடுத்த பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

## எரிபொருள் விலைகள் மீண்டும் உயர்வடையும்

விலைகள் உயர்வடையக் கூடுமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச அளவில் பல நாடுகளில் பொருளாதார மந்த நிலை காணப்படுகிறது.

இஸ்ரேல் - ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கி இருக்கிறது. இது பொருளாதார மந்த நிலையில் நாடுகளை பெரிதும் பாதிக்கும்.

இந்த போரில் மத்திய கிழக்கு நாடுகள் இரண்டு பக்கங்களாக பிரிந்து நிற்கின்றன. ஹமாஸ் பயங்கரவாத அமைப்பை எதிர்க்கும் சில நாடுகளும் ஆதரிக்கும் சில நாடுகளும் உள்ளன.

இந்த நாடுகள் அனைத்தும் கச்சா எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் பிரதான நாடுகளாக உள்ளன. போரின் எதிரொலியால் விரைவாக எரிபொருள் விலைகள் உயர்வடையும் சாத்தியம் அதிகரித்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி கச்சா எண்ணெய் விலையில் 5 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

போர் நீடித்தால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. இஸ்ரேல் ஜனாதிபதி, ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடனான போரை தொடர்ந்து முன்னெடுக்க உள்ளதாக கூறியுள்ளதால் கச்சா எண்ணெய் விலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட கூடும் கூறும் பொருளாதார நிபுணர்கள், இலங்கையிலும் விரைவில் எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படும் எனவும் கூறுகின்றனர்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலைகளை உயர்த்தியிருந்தது. அதன் பிரகாரம் 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 4 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதுடன் அதன் புதிய விலை 365 ரூபாவாகவும் 95 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 420 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன், புதிய விலை 351 ரூபாவாகவும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 62 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 421 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், இரஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போரால் மீண்டும் எரிபொருள் விலைகள் இலங்கையில் உயர்வடையும் எனவும் இது இலங்கையின் பல்வேறு பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# திருமலை குளக்கோட்டன் தோப்பு சிறுவர் பூங்காவில் சிறுவர்களுக்கான புகையிரத சேவை ஆரம்பம்





(அ . அச்சுதன்)

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் குளக்கோட்டன் தோப்பு சிறுவர் பூங்காவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியத்தினால் சிறுவர்களுக்கான விளையாட்டு புகையிரத சேவை , உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் செயல் படுத்தப்பட்டு வெள்ளிக்கிழமை (06) மாலை திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதி, மற்றும் அரச உயர் அதிகாரிகள், திருகோணமலை நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் பரமோஸ்வரன் உட்பட நகரசபை உத்தியோகத்தர்கள்பலர்கலந்து கொண்டனர். இவ் நிகழ்வில் பாலர் பாடசாலை சிறுவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலின் பதவிக்காலத்தை மேலும் ஒருவருடம் நீடிக்க சர்வஜன ...

இடையிலான சந்திப்பொன்று இடம் பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெற்றுக்கொடுப்பது மற்றும் ஆதரவளிக்க மறுக்கும் கட்சியின் எம்பிக்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொதுத் தேர்தலில் தமக்கு ஆதரவாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள கட்சிகளின் ஆதரவை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உத்தேச சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற பின்னர், ரணில் விக்ரமசிங்கே மேலும் ஒரு வருட காலத்திற்கு அரச தலைவராக நீடிக்க அனுமதிக்கும் வகையில் இதனுல் புதிய சரத்தொன்றை உள்வாங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## சட்டத்தின் ஆட்சி சரித்திரத்தில் மட்டுமே

நாடாளுமன்ற உறுப்பினரும் அதிபர் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு நீதி கோரி இன்றையதினம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமாக நாங்கள் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு அதில் எங்களுக்கு இணக்கமில்லை என்று சொன்னால் நாங்கள் அதற்கு மேற்பட்ட நீதிமன்றத்தை நாடுவோம்.

ஆனால் ஒரு நீதிபதிக்கே நியாயம் கிட்டாமல், ஒரு நீதிபதி நீதித்துறையில் தான் வழங்கிய தீர்ப்புக்காக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு, தன்னுடைய செயல்களுக்காக உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்.

தனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது, தனக்கு மரண அச்சுறுத்தல் இருக்கின்றது என்று தன்னுடைய பதவி விலகல் கடிதத்திலேயே வெளிப்படையாகச் சொல்லி நாட்டை விட்டு போகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகையினால் தான் எங்களுடைய வழமையான எதிர்ப்பு முறையினை கைவிட்டு வீதிக்கு இறங்கி இன்று உச்ச நீதிமன்றத்திற்கு முன்பாகவும், நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு முன்பாகவும் ஒன்று திரண்டு இந்த கோஷத்தை எழுப்பிக் கொண்டிருக்கின்றோம்.

நீதிச் சேவைக்கு தொடர்ச்சியாக ஒரு அச்சுறுத்தல் இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இப்போது ஒரு உச்ச நிலையை அடைந்திருக்கின்றது. ஆகையினால் உடனடியாக இதற்கு ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

இந்த நிலை திருத்தப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் சட்டத்தின் ஆட்சி என்பது இந்த நாட்டில், முன்னொரு காலத்திலே இருந்தது என்ற சரித்திரமாக மட்டும் இருக்குமே தவிர, சட்டத்தின் ஆட்சி என்றால் என்னவென்று கேட்கும் ஒரு சூழ்நிலை வந்துவிடும்.

ஆகையினால் இது சம்பந்தமாக உடனடியாக ஒரு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எங்களுடைய கோஷமாக இருக்கின்றது ?? என சுட்டிக்காட்டியுள்ளார்.

## கருணாவை பிரித்தது போல தமிழ் கட்சிகளைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்கு முன்னும் பின்னரும் இந்தியாவின் ரோலர் படகுகள் பவளப்பாறை உட்பட மீன் உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக வடபகுதியில் உள்ள மீனவர்கள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

கச்சதீவில் கூட சுதந்திரமாக சென்று மீன் பிடிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், நெடுந்தீவு கடப்பரப்பில் கூட மீன் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சிகண்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக மீனவ குடும்பங்கள் தமது இலக்கை அடைய முடியாத நிலையில் காணப்படுகின்றதாகவும் தெரிவித்தார்.

தொழில் புரியும் பகுதிகள் அட்டைப் பண்ணைக்கு வழங்கப்பட்டு மீன் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளதாகவும், இந்த நிலையில் தமிழக சகோதரர்களுக்கு அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறுவது தமிழக மீனவர்களையும் இலங்கையில் உள்ள வடபகுதி தமிழ் மீனவர்களையும் அடி பட வைத்து தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமான ஒரு விரிசலை உருவாக்கும் நோக்கிலும், இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியா தமிழர்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவை அறுத்தறியும் நோக்கில் நரி தந்திரபாயங்களில் ரணில் மேற்கொண்டு வருகின்றார்.

யுத்த காலத்தில் கருணாவை பிரித்தது போல தற்பொழுது இருக்கின்ற தமிழ் கட்சிகளைப் பிரிக்கின்றது போன்று ஜனாதிபதி ரணில் செயற்பட்டு வருகின்றார்.

எங்களுக்கு ஆதரவு தரக்கூடியவர்கள் மற்றும் எங்களோடு சேர்ந்து வரக்கூடிய அனைவரையுமே பிரித்து அவர்களுக்கிடையே கசப்பான உணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கிலே செயல்பட்டு வருகின்றார் எனவும், இந்திய மீனவர்களுக்கு எடுத்துரைத்து எங்களுடைய கடற்பரப்பில் எங்களுடைய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு இடையூறளிக்க வேண்டாம் என அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## வட, கிழக்கில் 20 ஆம் திகதி ஹர்த்தால்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ். தந்தை செல்வா அரங்கில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமான போதே எதிர்வரும் 20ஆம் திகதி பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

## மனித சங்கிலி போராட்டம் தோல்வியுற்றதும், ஹர்த்தாலுக்கு...

நடாத்திய மனித சங்கிலி போராட்டத்தை பார்த்தால், அந்த போராட்டம் யாழ்ப்பாணத்தை வந்தடைவதற்கு கூட ஆட்கள் இல்லை.

சாதாரணமாக பார்த்தால் பிரதேச சபை, மாகாண சபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் செயற்படுபவர்கள், தமிழ் கட்சிகளின் வேட்பாளர்கள் கூட அந்த போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அவ்வாறானவர்கள் பங்குபற்றியிருந்தால் கூட 2000 பேருக்கு மேல் போராட்டத்திற்கு பங்காற்றி இருப்பார்கள். இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்து எமது பிரதேசத்தில் செயல்படுத்தி பிரயோசனமில்லை.

மனித சங்கிலி போராட்டமானது வெற்றியளிக்கவில்லை என்பதை உணர்ந்து தற்போது பொதுமக்களை ஏவி விடுகின்றார்கள். இந்த ஹர்த்தாலை நடத்தி என்னதான் காணப் போகின்றார்கள்.

குறிப்பாக கிராம பகுதிகளில் உள்ளவர்கள் அன்றாட வேலை மூலம் தமது வாழ்வாதாரத்தை செயற்படுத்துவோர் இந்த ஹர்த்தாலினால் பாதிக்கப்படுவார்கள்.

ஏன் இந்த அரசியல்வாதிகள், பாராளுமன்றத்தில் அல்லது ஒரு சத்தியாகிரக போராட்டத்தில் குதிக்கக்கூடாது. ஏன் மக்களை ஏவி விடுகின்றார்கள். எதிர்வரும் நாட்களில் இவ்வாறான மக்களைக் கேடயமாக பயன்படுத்தும் போராட்டங்கள் தமிழ் கட்சிகள் நிறுத்த வேண்டும்.

குறிப்பாக அந்த காலத்தில் அமிர்தலிங்கம் போன்றவர்கள் சத்தியாகிரக போராட்டத்தினை செய்தார்கள். இந்த ஹர்த்தாலுக்கு பதிலாக முற்றவெளி மைதானத்தில் ஒரு சத்தியாகிரக போராட்டத்தினை முன்னெடுக்கலாம்.

ஆனால் அரசியல்வாதிகள் மக்களை பயன்படுத்தி மக்களை நசுக்கும் முகமாக செயற்படுகின்றார்கள். இதை ஏற்க முடியாது.

கொழும்பில் நடந்தது ?அரகல? போராட்டத்தை மக்கள் தாமாகவே முன்வந்து முன்னெடுத்திருந்தார்கள்.

எந்த அரசியல்வாதியோ கட்சியோ அழைப்பு விடவில்லை.

அதேபோல மக்கள் தாமாக முன்வந்து தான் இந்த போராட்டத்தில் ஈடுபட வேண்டுமே தவிர, அரசியல் கட்சிகள் இவ்வாறு ஹர்த்தால் போராட்டம் என அழைப்பு விடக்கூடாது.

எனவே தமிழ் கட்சிகள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இனியும் பொதுமக்களை ஏமாற்றக் கூடாது. என்றார்.

## கூட்டமைப்புக்குள் பாரிய பிளவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி மூன்று பங்காளிக் கட்சிகளும் புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸுடன் இணைந்து புதிய அரசியல் கூட்டணி, சி.வி. விக்னேஸ்வரன் கட்சி எதிர்கால தேர்தலில் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிழக்குப் பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா






(அருளானந்தராசா சதுஜனா)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா வந்தாறுமூலை வளாக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா தலைமையில் சனி (07) மற்றும் ஞாயிற்றுக் கிழமை (08) இரு தினங்களில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 1760 பேர் உள்வாரி, வெளிவாரி பட்டங்களைப் பெற்றனர்.

முதலாவது (07) நாளில் முதல் அமர்வில் ஒரு கலாநிதிப்பட்டம், 05 விஞ்ஞான கல்வியில் முதுமாணி, விவசாய விஞ்ஞானத்தில் 14 முதுமாணி, ஓர் கல்வியியல் முதுமாணி, 12 கலை முதுமாணி, 8 வியாபார நிர்வாக முதுமாணி, 13 அபிவிருத்தி பொருளியல் முதுமாணி, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு டிப்ளோமாபட்டம் ஒன்று மற்றும் 213 இளங்;கலைமாணி (வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி, தாதியியல் விஞ்ஞானமாணி, சித்தமருத்துவம் - சத்திர சிகிச்சை இளமாணி, சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி போன்றவை வழங்கப்பட்டன.

வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிக நிர்வாகமாணி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, வணிகவியல்மாணி, சிறப்பு வணிகவியல் மாணி, கணக்கீடு மற்றும் நிதியியல் சிறப்பு வணிகவியல்மாணி, முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி, தகவல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான மாணி, மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, வியாபார முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி என 274 பட்டங்களும் மற்றும் விஞ்ஞானமாணி, நுண்கலைமாணி - இசை, நுண்கலைமாணி - நடனம், நுண்கலைமாணி - நாடகமும் அரங்கியலும், நுண்கலைமாணி - கட்புலமும்; தொழிநுட்பவியல் கலையும் எனும் வகையில் 318 பட்டங்கள் முதலாம் நாளில் 2வது, 3வது அமர்வுகளில் வழங்கப்பட்டன.

இரண்டாம் நாள்; (08) கல்விமாணி, கலைமாணி (விசேட மற்றும் பொதுப்பட்டம்) எனும் வகையில் 251 பட்டங்களும் கலைமாணி (விசேட மற்றும் பொதுப்பட்டம்), பிரயோக பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞானமாணி, கணினி விஞ்ஞானமாணி எனும் வகையில் 338 பட்டங்களும், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி, தொடர் பாடல்கற்கைகளில் கலைமாணி, மொழியில் கலைமாணி, வியாபார நிர்வாகமாணி (வெளிவாரி), வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) எனும் வகையில் 311 பட்டங்கள் வழங்கப்பட்டன.

# 38 ஆவது கலாபூணம் விருது வழங்கும் விழா- 2023

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)




இலங்கைத் திருநாட்டின் கலைத்துறைக்கு உன்னதமான அபிமானத்துடன் சேவையாற்றி தலைமுறைகள் கடந்து கலைகளால் தேசத்தின் எதிர்காலத்தினை உலகத் தரத்துக்கு கொண்டு சென்ற கலைஞர்களுக்கான மகுடம் சூட்டும் 38 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா - 2023 இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

2022ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்களான ஏ.சி. ராஹில் - நிந்தவூர் (இலக்கியம்), எம்.எம்.ஜமால்தீன் - ஏறாவூர் (இலக்கியம்), ஹாஜா அலாவுதீன் - பாலாவி (இலக்கியம்), எம்.கே.எம்.அஸ்வர் - மொரட்டுவ (ஊடகம்), எஸ். தஸ்தகீர் (இலக்கியம்) யூ.எல். கலீல் ரஹ்மான் - கல்முனை (ஊடகம்), ஏ.யூ.எல். அப்ரா உம்மா - சம்மாந்துறை (இலக்கியம்), ஏ. இஸ்ஸதீன் - சாய்ந்தமருது (நாட்டுப்புற கலைகள் - கோலாட்டம்), இஸட். ஏ. எம். ஹனீபா - கண்டி (இலக்கியம்), ஏ.எல்.ஏ. சுப்ஹான் அக்பர் - மாவடிப்பள்ளி (பாடல்) ஆகிய 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை.அனிருத்னன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சதுரி பிந்து, கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் யசிந்தா குணவர்தன, புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண உட்பட மூத்த கலைஞர்கள் பலரும் அதிதிகளாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், இம்முறை கலாபூஷணம் விருதுக்காக இலங்கையின் நாலாபுறத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள் பலரும் கௌரவம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# நாவிதன்வெளியில் களைகட்டிய சர்வதேச ஆசிரியர் தின விழா!






( காரைதீவு சகா)

சம்மாந்துறை வலய நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய சர்வதேச ஆசிரியர் தின விழா அதிபர் திருமதி. நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும், பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா மற்றும் அதிபர் ஆசிரியர்கள் ஆளுரய பூமாலைகள் சூட்டப்பட்டு பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டார்கள்.

பின்பு மண்டபத்தில் ஆசிரியர் தின விழா பிரதி அதிபர் பி.ஜெகதீசனின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது .

அங்கு, அதிபரின் வழிகாட்டலில் உயர்தரப் பிரிவு பொறுப்பாசிரியர் ந. கோடீஸ்வரனின் நெறிப்படுத்தலில், உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக கச்சிதமாக பலத்த கரகோஷத்துடன் மேடை ஏற்றினர்.

நிறைவில், பிரதம அதிதியான நாவிதன்வெளிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன் நட்சத்திர அதிதியான வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

2022 ம் ஆண்டு குறைவான விடுமுறை பெற்ற திருமதி.சுவானந்தி ரூபன் ஆசிரியையும், இலட்சுமணன் பரமதேவன் ஆசிரியரும் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் நிறைய கலை நிகழ்ச்சிகள் மாணவர்களை குதூகலிக்கச் செய்தன.

கூடவே ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் கொய்யா மரக்கன்றுகளை மாணவர்கள் பரிசளித்து கௌரவித்தனர்.

ஆசிரியர்களின் வில்லுப்பாட்டு நகைச்சுவை பாடல்கள் ஆடல்கள் நாடகங்கள் கவிதைகள் விளையாட்டுகள் என்று மேடை களைகட்டியது.

# திருமலை மனையாவெளியில் நடமாடும் நூலகசேவை..!



(அ . அச்சுதன்)

திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக நடமாடும் சேவை திருகோணமலை மனையாவெளி மகளிர் பொது மண்டபத்தில் சனிக்கிழமை (07) நூலக கண்காட்சியும் நடமாடும் நூலக சேவையும் திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் மாணவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# மட்டக்களப்பு வாவியில் தோணி கவிழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சீலாமுனை பகுதியில் இருந்து நாவலடி பிரதேசத்திற்கு மட்டு வாவி ஊடாக 6 பேர் பயணித்த தோணி வாவியில் கவிழ்ந்ததில் நீரிழ் மூழ்கி உயிரிழந்த நிலையில் இருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன் 4 பேர் நீந்தி உயிர் தப்பிய சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (08) மாலையில் இடம பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மட்டு சீலாமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருசாந்தன், மாமாங்கத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருந்தயன் ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டனர்

மட்டு தலைமையக பொலிஸ் பிரிவு சீலாமுனை மாமாங்கத்தைச் சேர்ந்த இளைஞர்;கள் 6 பேர் டிக்ரொக் வீடியோ தரவேற்றம் செய்வதற்காக சம்பவதினமான இன்று காலை 11 மணியளவில் சீலாமுனையில் இருந்து தோணியில் வாவியில் பிரயாணித்து நாவலடிக்கு சென்று அங்கு வீடியோ மற்றும் புகைப்படங்களை ரிக்டொக்கிற்கு எடுத்துவிட்டு மீண்டும் சீலாமுனைக்கு தோணியில் பிரயாணித்த போது தோணியின் கட்டப்பட குள்ளாதடி இரண்டாக உடைந்ததையடுத்து தோணி வாவியில் கவிந்ததையடுத்து அனைவரும் நீரில் முழ்கினர்.

இதனையடுத்து 4 பேர் நீந்திகரையடைந்ததுடன் இருவர் காணாமல் போயிருந்ததையடுத்து மீனவர்களின் உதவியுடன் அவர்களை தேடியநிலையில் நாவலடி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டு மட்டு போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிசார் காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.



# மட்டக்களப்பில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

2014/2015 வரவு செலவு திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தலின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள மோட்டர் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றை 05 ஆண்டுகளின் பின்னர் உரிமை மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மேற்குறிபிட்ட வரவு செலவு திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதன் கீழ் 05 வருடங்கள் கடந்ததன் பின்னர் நிபந்தனைகளை நீக்கி முழு உரித்தினை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் (21) திகதி மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையில் மோட்டர் போக்குவரத்து திணைக்களத்தினால் பின்வரும் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

2014/2015 அரச சேவையாளர்களது மோட்டார் சைக்கிள்களது நிபந்தனைகளை நீக்கி உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல்.

ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் தமது கோவைகளை நடமாடும் சேவைக்கு கொண்டு வருவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக்கொள்வதற்காக தங்களது அலுவலகத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களது மோட்டார் சைக்கிள்களது நிபந்தனைகளை நீக்குவதற்குரிய கோவைகளை காலக்கிரமத்தில் இரு உத்தியோகத்தர்களின் மூலம் சேகரித்துக்கொள்வதற்கும், அத்துடன் அதற்குரிய கட்டணங்களை சேகரித்துக்கொள்வதற்கும் (மாவட்ட செயலாளர் பொது வைப்புக்கணக்கிற்கு வைப்புச் செய்தல் ஊடாகவோ அல்லது காசாகவோ) நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் தங்களின் கீழுள்ள உப அலுவலகங்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் அறியத்தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ் விடயம் தொடர்பாக உப அலுவலகங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தங்களது அலுவலகத்தில் சேகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஒரு உத்தியோகத்தர் மூலம் 2023.10.12ம் திகதி மு.ப.9.00 மணிக்கு அருகிலுள்ள பிரதேச செயலகத்திற்கு வருகை தரும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதன் போது குறித்த கோவைகளுடன் அதற்காக செலுத்த வேண்டிய பணத்தை (மாவட்ட செயலாளர் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட) காசோலை ஒன்றின் மூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பெயரில் செலுத்த முடியாதோடு தேவைப்படின் காசாகவும் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. காசோலை மூலமோ அல்லது பணமாகவோ கொடுப்பனவு செய்தவர்களது பெயர், வாகன இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் உள்ளடங்கிய பொதுப்பட்டியல் ஒன்றையும் தயாரித்து வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு வழங்குமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





முன்னைய வருடங்களில் விண்ணப்பித்து இதுவரை தீர்க்கப்படாது உள்ள விண்ணப்பங்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு.

பதிவுச் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்ளல்.

வாகனங்களை பரிசீலித்து நிறைச்சான்றிதழ் மற்றும் அடையாளச் சான்றிதழ் வழங்குதல்.

வாகனத்திற்குரிய உரிமையாளர் உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்க வேண்டும்.

நிறைச் சான்றிதழ் பெறவேண்டுமாயின் வாகனத்தினை நிறுத்து நிறையினை உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.

சகல வாகனங்களுக்கான உரிமை மாற்றல் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல்.

எழுத, வாசிக்க தெரியாத தேர்ச்சி குறைந்த நபர்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு விசேட பரீட்சையொன்று நடாத்துதல்.

ஒரு தடவையேனும் எழுத்துப்பரீட்சையில் தோற்றியிருக்கவேண்டும்.

உரிய கிராம சேவை அலுவலரிடம் எழுத வாசிக்க முடியாது என உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.

வீதிப்பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

நீண்டகாலமாக வாகன வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாத, ஆவணங்களில் குறைபாடுகளுடன்கூடிய வாகனங்களுக்காக மீண்டும் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு சிபாரிசுக்கடிதங்கள் வழங்குதல்.

சிலிண்டர் கொள்ளளவு 50ற்கும் குறைந்த மோட்டார் சைக்கிள்களை (மோபேட்) பதிவு செய்தல்.

2010.08.31ம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மோபேட் மோட்டார் சைக்கிள்களை (50 இஇக்கு குறைந்த) பதிவு செய்வதாயின் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

சமாதான நீதவான் ஒருவரினால் வழங்கப்பட்ட சத்தியக்கடதாசி (உரிய மாதிரிப் படிவத்தினை மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

உரிய பகுதிக்குரிய கிராம சேவகரினால் குறித்த மோபேட் மோட்டார் சைக்கிளினை உரியவர் குறிக்கப்பட்ட திகதிக்கு முன்னராகவே பாவித்துக்கொண்டிருக்கும் உரிமையாளர் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதம்.

2010.08.31ம் திகதிக்கு பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட (50CCக்கு குறைந்த) மோட்டார் சைக்கிள் எனில் புதிதாக பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கவேண்டும்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.

உரிய விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

விசேட தேவையுடைய நபர்களுக்காக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தேவையான வைத்திய தொழினுட்பக் குழுவின் சிபாரிசுகளை வழங்குதல் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தால் பெறப்பட்ட வைத்தியச்சான்றிதழுடன் சமூகமளிக்கவேண்டும்.

வாகனங்களின் Ex-t-ra-ct வழங்குதல்.

தெளிவற்ற செஸி மற்றும் எஞ்சின் இலக்கங்களை தேசிய ரீதியாக அச்சிடல். (மோட்டார் சைக்கிளுக்கு மட்டும்)

உரிய மோட்டார் சைக்கிள் மற்றும் பதிவுப் புத்தகத்துடன் உரிமையாளர் சமூகமளித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்நடமாடும் சேவையை திறம்பட நடத்துவதற்கு தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுவதுடன், இது தொடர்பான அறிவுறுத்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

# அதிகாலையில் காட்டு யானை காரைதீவில் அட்டகாசம்!



( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவுப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று(9) அதிகாலை புகுந்த தனியன் யானை காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையை துவம்சம் செய்தது.

சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சா.வேல்முருகுவின் களஞ்சிய சாலையிலுள்ள நெல்மூடைகளை யானை பதம் பார்த்தது.

இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னை வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.

இவ்வாறு தினமும் யானை மனித மோதல் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# விமர்சிப்பவர்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது

## பொதுமக்கள் முன் வீராப்பாக பேசிய நகரசபை செயலாளர்

(த.சுபேசன்)

தன்னை பற்றி விமர்சிப்பவர்களால் ஒரு முடியைக் கூட பிடுங்க முடியாது என சாவகச்சேரி நகரசபை செயலாளர் மக்கள் முன்னிலையில் வீராப்பு பேசி கடும் எதிர்ப்பிற்கு ஆளாகியுள்ளார்.

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல் அண்மையில் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற போதே சபையின் செயலாளர் மக்களை ஆத்திரமடையச் செய்யும் வார்த்தைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

கூட்டத்திற்கு வருகை தந்திருந்த நகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் நகரசபையானது சபையின் கடந்த கால தீர்மானங்களை மீறிச் செயற்படுவதாகவும்,அபிவிருத்திகளை மேற்கொள்ள பின்னடிப்பதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக கூட்டத்திற்கு தலைமை வகித்த நகரசபைச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்;

சாவகச்சேரி நகரசபையில் உள்ள சில உத்தியோகத்தர்களை வைத்துக்கொண்டு பணியாற்ற முடியாது.

அத்துடன் எனது அறிவுறுத்தல்களையும் சில துறை சார் உத்தியோகத்தர்கள் நடைமுறைப்படுத்துவதுமில்லை. அதனாலேயே பல அபிவிருத்திகள் கிடப்பில் போடப்பட்




டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையில் எந்தவொரு அபிவிருத்தியும் இடம்பெறவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கிறேன்.

சாவகச்சேரி நகரசபையில் பணியாற்ற வேண்டும் என நான் விருப்பப்படவுமில்லை, விருப்பம் இன்றித்தான் கடமைக்கு வந்தேன்.

வெளியே நின்று விமர்சிப்பவர்களால் எனது ஒரு முடியைக் கூட பிடுங்க முடியாது. என வீராப்பாக பேசியிருந்தார்.

இந்நிலையில் நகரசபை செயலாளரின் பொறுப்பற்ற கருத்தைக் கேட்ட முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தமது கடும் எதிர்ப்பினை வெளியிட்டதுடன் கடமையை செய்ய முடியாவிட்டால் பதவி விட்டு விலகுங்கள் எனவும் தெரிவித்திருந்தனர்.

# திருவதிகை கலைக்கூடத்தினால் திருக்கோவில் கல்வி வலய மாணவர்களுக்கு இலக்கியப் போட்டி நிகழ்வுகள்





(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை மாவட்ட திருவதிகை கலைக்கூடத்தினால் மகாகவி பாரதியாரின் 141ஆவது ஜனன தின நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள உயர்தர மாணவர்களுக்கான இலக்கியப் போட்டிகள் நேற்று இடம்பெற்று இருந்தன.

இவ் கலை இலக்கியப் போட்டியானது அம்பாரை மாவட்ட திருவதிகை கலைக்கூடத்தினால் நடாத்தப்பட்டு இருந்தது கலைக்கூடத்தின் உபதலைவர் எஸ்.பி.நாதன் அவர்களின் நெறிப்படுத்தலில் இவ் போட்டிகள் நடாத்தப்பட்டு இருந்தது.

திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள பொத்துவில் ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் கல்விக் கோட்டங்களை உள்ளடக்கிய 12 பாடசாலைகளின் மாணவ மாணவிகள் பங்கு கொண்டு இருந்ததுடன் பாரதியாரைப் பற்றிய கருப்பொருளைக் கொண்டு கவிதை, கட்டுரை மற்றும் பாடல் இசைத்தல் போட்டிகள் என்பன இடம்பெற்று இருந்தன.

இவ்போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு மார்கழி மாதம் இடம்பெறவுள்ள பாரதியாரின் 141ஆவது ஜனன தின நூற்றாண்டு விழாவின் போது முறையே 5000, 3000, 2000 என பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் திருவதிகை கலைக்கூடத்தினால் வழங்கி வைக்கப்படவுள்ளதுடன் அன்றைய தினம் வெளியிடவுள்ள திருவதிகை ஆன்மிக இலக்கிய சஞ்சிகையிலும் வெற்றி பெற்ற மாணவர்களின் ஆக்கங்கள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 4 பிள்ளைகளின் தந்தையினை காணவில்லை!



வவுனியா சிதம்பரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகனூர் கிராமத்தில் வசித்து வரும் அன்டன் ஜொன்சன் என்பவரை கடந்த 04.10.2023 அன்று தொடக்கம் காணவில்லை என தெரிவித்து அவரின் மனைவியினால் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த குறித்த நபர் கடந்த 04.10.2023 அன்று காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் இன்று வரை வீடு திரும்பவில்லை இதனை அடுத்து அவரின் மனைவியினால் கணவரை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. வீட்டிலிருந்து அவர் வெளியேறுகையில் நீல நிறம் சரம் மற்றும் ரோஸ் கலர் சட்டையும் அணிந்து சென்றிருந்தார். எனவே இவரை கண்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 0776289460 (மகன்), 0774136383 (மனைவி), 0762477411 (மகள்) ஆகிய இலக்கத்திற்கு அறிவித்து உதவுமாறு தெரிவித்துள்ளனர்.

# வினாத்தாள்கள் வழங்கி வைப்பு



தலவாக்கலை பி.கேதீஸ்

புலமை விடியல் நிறுவனத்தினால் இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் மாகாண , மாவட்ட ரீதியாக இலவசமாக வழங்கப்பட்டன.அந்த வகையில் நுவரெலியா கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. இதன் போது நிறுவனத்தின் தலைவர் இராஜரட்ணம் பிரகாஷ், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நவீன தமிழ் இலக்கியம்; பார்வை; 02

# தமிழகத்து நவீன தமிழ்க் கவிதைப் போக்கில் அதன் பண்புகளின் வெளிப்பாடு

## ஆரம்ப காலப் பார்வை (1850 - 2000)

கவிமணியிடம் எளிமை, மரபை மீறும் பண்பு, புதிய உள்ளடக்கம் ஆகியன காணப்பட்டாலும் கவிதைகளில் பாரதியிடம் நாம் கண்ட ஆவேச உணர்வையோ, வேகத்தையோ காணமுடியவில்லை. தீண்டாதார் விண்ணப்பம், ஒற்றுமையே உயர்வு என்னும் இவருடைய கவிதைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக அமைதியாகவும், தர்க்க ரீதியிலும் மேல் சாதியினரிடம் கவிஞர் மன்றாடுகின்றார். இவ்வமைதிக் குரல் நமக்குக் காந்தியின் குரலாகவே ஒலிக்கிறது.

பெண்மையின் மென்மைக்கும், தன்மைக்கும், எளிமைக்கும் எடுத்துக் காட்டுக்களாக இன்றைய தமிழ் கவிதைகளில் விளங்குபவை கவிமணியின் பாடல்கள் எனலாம். சாந்தமான உணர்ச்சி ததும்பி நிற்கும் இவருடைய பாடல்களில் மொழியின் நெளிவு, சுளிவுகளையும் இனிய சொற்களால் உள்ளத்தை நேரடியாகத் தொடுகின்ற இயல்பையும் மிகச் சாதாரணமாக யாரும் உணர்ந்து அனுபவிக்க முடியும்.

*மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவம் செய்திட வேண்டுமம்மா*
*பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்*
*பாரில் அறங்கள் வளரும் அம்மா*

எனவும், பாரதியைப் புகழ்ந்து பாடும்போது எளிமையும் தன்னடக்கமும் தென்படுவதைக் காணலாம். மேலும்,

*பாட்டுக்கு ஒரு பலவன் பாரதியடா - அவன்*
*பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினான் அடா*
*கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே யடா - அந்தக்*
*கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா*

கவிமணி வேடிக்கையான முறையில் கற்பனை செய்திருந்தாலும் இந்தப் பாடல் பாரதியின் கவிதைகளுக்கு நல்ல திறனாய்வு என்று சொல்வது போல் அமைந்துள்ளது. இப்பாடலில் பாரதியின் எல்லா வகையான திறமைகளையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அவருடைய நையாண்டிக்கும் முற்போக்குக்கும் நல்ல எடுத்துக் காட்டாக உள்ளது நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி டான்மியம் ஆகும். இசைக் கச்சேரிகளில் பாடக்கூடிய நல்ல கீர்த்தனைகளையும் பாடியுள்ளார்.

தமிழ்க் கவிதையில் பாரதியார் செய்த மொழி பெயர்ப்புச் சோதனைகளைக் கவிமணி சற்று ஆளமாக முன்னெடுத்துச் சென்றுள்ளார். எட்வின் ஆர்னோல்ட் (உஞ்தீடிண அணூணணிடூஞ்) ஷூணு;ஹூணீதூடீ;டீணீதூ; ஞ்டஞச் கூடனு ஃடிஞ்டஞ ணிஹூ அண்டிச் எனும் ஆங்கிலக் கவிதை நூலைக் கவிமணி தமிழில் ஆசிய ஜோதி என மொழி பெயர்துள்ளார். இந்நூலை மொழி பெயர்த்துள்ளார் என்று சொல்வதையும் விட மூல நூலின் கருத்துக்களை உள்வாங்கிப் புத்தாக்கமாகப் படைக்கப்பட்டிருப்பதாகவே இவருடைய ஆசிய ஜோதி மதிக்கப் பெறுகின்றது. பாரசீகக் கவிஞன் உமர் கயாமின் பாடல்களும் பிட்ஜெரால்டின் ஆங்கிலக் கவிதையின் வழி தமிழாக்கம் பெறும்போது உமர் கயாம் இந்தியச் சிந்தனைகளில் தோய்ந்த ஒரு தத்துவக் கவிஞனாகவே கவிமணியின் வாக்கில் புதுப் பிறவி எடுக்கின்றார். ஆங்கிலக் கவிஞன் வில்லியம் பிளேக்கின் (ஙிடிடூடூடிச்ட் ஆடூச்டுனு) குழந்தைப் பாடல்களையும் கவிமணி தமிழாக்கம் செய்துள்ளார். இவையும் மூல நூல் போல் எளிமையாகவும் இனிமையாகவும் விளங்குகின்றன. தமிழ் கவிதைக்கு மொழியாக்கமும்



குழந்தை இலக்கியமும் கவிமணியின் பங்களிப்பு எனலாம். பாரதியாரைப் போலவே நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளையும் எளிய சொற்களில், எளிய வடிவங்களில் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் ஊட்டினார். காந்தீயக் கவிஞர் என்னும் வகையிலும் அவர் புகழ் பெற்றார்.

*கத்தியின்றி ரத்தமின்றி*
*யுத்த மொன்று வருகுது*
*சத்தியத்தின் நித்தி யத்தை*
*நம்பும் யாரும் சேருவீர்*

என்னும் அவருடைய காந்தீயப் போர்ப் பரணி இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் மந்திரப் பாடலாகியது. வேதாரணியம் உப்புச் சத்தியாக் கிரகத்தின் போது இப்பாட்டு தொண்டர்களுக்கு உச்சாகம் ஊட்டும் வழி நடைப் பாட்டாக உயர்ந்தது. சங்கொலி, தமிழ் தேர், காந்தி அஞ்சலி ஆகியன இவருடைய கவிதைத் தொகுப்புக்களாக வெளி வந்துள்ளன. தமிழ் உணர்வைப் பொறுத்த வரையில்

*தமிழன் என்று சொல்லடா*
*தலை நிமிர்ந்து நில்லடா*

என்ற பாடல் என்றும் தமிழ் உணர்வு ஊட்டும் பாடல்களுள் ஒன்றாக விளங்குகிறது. பாரதியாரைப் பின்பற்றி நாமக்கல் கவிஞர் காதலைப் போற்றிப் புனைவியல் பாங்கில் அவனும் அவளும் என்னும் காப்பியத்தையும் இளற்றியுள்ளார். இவருடைய கவிதைகளில் மரபை மீறும் பண்பு, புதிய உள்ளடக்கம், வடிவப் பிசோதனை, எளிமையாக்கம், சமகாலப் போக்கு, சமூமூகச் சார்பு ஆகிய நவீன தமிழ்க் கவிதைகளுக்குரிய பண்புகள் பெருமளவு காணப்படுகின்றன.

கலைவாணனும் ச.து.சு. யோகியாரும் பாரதியின் கற்பனாவாதம், ஆன்மீகம் ஆகியவற்றின் வாரிசுகளாகக் கருதத் தக்கவர்கள். கம்பனின் வளத்தையும் பாரதியின் எளிமையையும் யாப்பில் செயற்படுத்திக் காட்டியவர்கள் இவர்கள். ச.து.சு யோகியார் புதுமை சில படைத்த கவிஞராக மதிக்கப்படுகின்றார். கம்பராமாயண நடையினைப் பின்பற்றிக் கருத்துச் செறிவுமிக்க அழகிய பாடல்களை இயற்றியுள்ளார். பாலபாரதி எனும் புனை பெயரில் அவர் படைத்த கவிதைகள் இலக்கிய நயம் நிரம்பியவை. இயேசு பிரானின் தொண்டராகிய மேரி மரகதலேனாவைப் பற்றி இவர் பாடியுள்ள காவியம் கவிதைச் சுவை மிக்கது. புனைவியல் பாங்கில் அமைந்தது.

சுதந்திரப் போராட்டக் காலப்பகுதியில் இருந்து நாப்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கவிதைகளும் இசைப் பாடல்களும் எழுதிவரும் துறவியார் சுத்தானந்த பாரதியார் ஆவார். அவருடைய பாடல்களில் பலவகையானவை நாட்டுணர்ச்சி ஊட்டும் பாடல்கள், சமயம் சார்பான கவிதைகள், புத்துலகக் கனவு பற்றிய பாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கலாம். பல பாடல்களில் மரபு காணப்பட்டாலும் புதிய கவிதை'வடிவம்,



**சின்னத்தம்பி குருபரன்**

உள்ளடக்கம் ஆகியவற்றையும் காணலாம்.

வயிற்றுப் பிழைப்பும் வாழ்க்கைப் போராட்டமுமே இன்றைய புதுமைக்கால மனிதனை அலைக் கழிக்கும் அன்றாட சிந்தனையாக இருப்பதால், இந்தப் பொறி ஊழியில் மக்கள் மத்தியிலே ஒரே பரபரப்பு, பதட்டம், வேகம், விறுவிறுப்பு, கலையுள்ளம் இருந்தாலும் காவியங்களையோ கவிதைகளையோ ஓரிடத்தில் உட்கார்ந்து படித்துச் சுவைக்க நேரமில்லை. அதற்குரிய கல்வித் திறமும் இல்லை. அதனால் இன்றைய கால கட்டத்தில் கவிதை நடையைவிட உரை நடையின் ஆதிக்கமே உச்ச நிலையில் உள்ளது. இத்தகைய காலச் சூழலுக்கு ஏற்ப, கற்பனை வளம் படைத்த தற்காலக் கவிஞர்களும், பார்வைக்கு உரை நடை போன்ற அதே நேரத்தில் உண்மையில் கவிப் பண்பு வாய்ந்த புதுக் கவிதைகளைப் புனைவதில் ஆர்வம் காட்டினர். பாரதி பரீட்சார்த்த முயற்சி மூலம் அதனைத் தொடங்கி வைத்தார். பாரதிக்குப் பின் புதுக் கவிதை புனைவதில் ஆர்வம் காட்டியவர் ந. பிச்சமூர்த்தி ஆவார். கு.ப.ராஜகோபாலன் புதுமைப்பித்தன் ஆகியோரும் புதுக் கவிதை புனைந்தனர். மயன் என்ற பெயரில் க.ந சுப்பிரமணியமும், நாணல் என்ற பெயரில் பேராசிரியர் சீனிவாசராகவனும் கவிதைகள் புனைந்தனர். புதுக் கவிதையை புகழ் பெற்ற எழுத்தாளர்களான சி.சு.செல்லப்பா, எஸ்.வைத்தீஸ்வரன் வல்லிக்கண்ணன், சிவசங்கரன், ஞானக்கூத்தன் போன்றோரும் போற்றி வளர்த்தனர். இலக்கணத் தூய்மையோடு நா.காமராசன், சிற்பி, செந்தமிழ்மாறன், தமிழன்பன், அப்துல் ரகுமான், புவியரசு போன்றோரும் புதுக் கவிதைகளை மிகுதியாகவே பாடியுள்ளனர். இக்கவிதைத் துறையில் பெயர் பெற்ற பிற எழுத்தாளர்களான மேத்தா, இங்குலாப், அபி போன்றோரும் அடங்குவர்.

நவீன தமிழ் கவிதையின் அடுத்த கட்டத்தில் மேலும் சில பொக்குகளை அவதானிக்கலாம். பாரதிதாசனின் நேரடி வாரிசுகளாக சாரதா, கம்பதாசன், கண்ணதாசன், முடியரசன் போன்றவர்கள் அமைகின்றனர். கவிதையின் பொருளிலோ, வடிவிலோ இவர்கள் புதுமை எதனையும் சாதிக்கவில்லை. சமகாலப் பிரக்ஞை இவர்களிடம் இருந்து தூரத்திலே நின்றது. நடைமுறை வாழ்வில் இருந்து பெரிதும் விலகிய கற்பனாவாதம் இவர்களின் கவிதைகளின் பொதுப் பண்பாக அமைந்தது. பாரதி என்ற பிரவாகத்தின் ஒரு கிளை ஓர் இடத்தில் தேங்கிய குட்டையாகி விட்டதெனலாம். அது இவர்களிடத்தில்தான், நவீன சிந்தனைப் போக்குகளை, உணர்வு நிலைகளை வெளிப்படுத்துவதற்குச் செய்யுள் வழிக் கவிதையினால் இயலாது செய்யுள் செய்துவிட்டது என்ற கருத்துக்கள் வலுப்பெற இவர்களது கவிதைகளே அடிப்படையாக அமைந்தன.

இவ்வாறு, மகாகவி பாரதியினால் கையாளப்பட்ட நவீன தமிழ்க் கவிதையின் பண்புகள் பின்வந்தவர்களால் முழு வீச்சுடன் பயன்படுத்தப்படவில்லை. அத்தகைய பண்பு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தேக்கநிலை அடைந்திருப்பதை அவதானிக்கலாம். போராசிரியர் க. கைலாசபதி நவீன இலக்கியத்தின் மிக முனைப்பான அம்சங்களில் ஒன்று புதுமையை - மாற்றத்தை- பிரக்ஞை எ+த;ணுடனூ மேற்கொள்வதாகும் எனக் கூறுவதற்கேற்ப மகாகவி பாரதி சகல துறைகளிலும் கால் பதித்தது வெற்றி கண்ட அளவுக்குப் பின்வந்த கவிஞர்களால் நிலைத்து நிற்க முடியவில்லை.

இக்கட்டுரையின் மூலம் நவீன தமிழ்க் கவிதையின் பண்புகள் கவிதைகளில் எவ்வாறு பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. சமூகப் பார்வை, சர்வதேச நோக்கு, தேசிய நோக்கு, நாட்டுப் பற்று, சமூகப் பற்று, சமுதாய விடுதலை, ஆன்மீக விடுதலை ஆகியன கவிதைகளில் பின்பற்றப்பட்டிருக்கும் முறை, மரபை மீறும் பண்பு, புதிய உள்ளடக்கம், வடிவப் பரிசோதனை, எளிமையாக்கம் ஆகிய பண்புகளும் பாரதியார் கவிதைகளில் ஆழமாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றன. ஏனைய கவிஞர்களின் கவிதைகளில் ஒன்று அல்லது பல அம்சங்கள் விடுபட்டிருப்பதையும் அவதானிக்கலாம். இருந்தும் நவீன தமிழ் கவிதைகளில் நவீன சிந்தனைகளும், போக்குகளும் இன்றைய நவீன தமிழ்க் கவிதைகளில் இன்றும்கூடப் பின்பற்றப்படுகின்றன. ஆனால் பாரதியின் முழுமையைக் காணமுடியவில்லை.

# மன்னாரில் சுற்றுச் சூழலை பாதுகாக்க மன்னார் ஆயர் இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை அழைப்பு

**( வாஸ் கூஞ்ஞ )**

-மன்னாரில் இடம்பெற்று வரும் சுற்று சூழலை அழிப்பதற்கு எதிராக தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும், இயற்கைவள பாதுகாப்பு செயற்பாட்டாளர்களும், இயற்கைவள சட்டவாளர்களும், பொதுமக்களும் இணைந்து செயலாற்றுவதற்கு அழைப்பு விடுகின்றோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு ஊடகங்கள் மூலம் அழைப்ப விடுத்துள்ளார்.

-மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி செபமாலை அன்ரன் அடிகளார் தலைமையில் வாழ்வுதயத்தில் திங்கள் கிழமை (09) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தை பாதுகாத்தல் என்ற விடயத்தைப் பற்றி தெரிவிக்க வேண்டிய கடற்பாடு எனக்கு உண்டு.

கறிற்றாஸ் வாழ்லுதயம் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் ஒரு நிறுவனமாகும். இதன் செயல்பாடுகளில் ஒன்றாக இயற்கை வளத்தை பாதுகாப்பதும் ஒன்றாகு

கறிராஸ்-வாழ்வுதயம் நிறுவனமானது ˀஇயற்கை வளங்களைப் பாதுகாப்போம்ˀ எனும் திட்டத்தினை கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தி வருகின்றது.

இக்காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளச் சுறண்டல்கள், இயற்கைவள அழிப்புகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

இது தொடர்பாக பல அதிகாரிகளின் கவனத்திற்கும் துரித செயற்பாடுகளுக்கும் கொண்டுவருவதோடு மக்களுக்கு இதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் உள்ளதை உணர்ந்தபடியினாலேயே இந்த ஊடகச் சந்திப்பானது உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி எனும் பெயரில் எமது மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்க முடியாது.

இப் பூமியானது நாம் அனைவரும் வாழ்வதற்கான பொது இல்லம். ஆகவே, நாம் எமது முன்னோரிடமிருந்து எவ்வாறு வளத்தோடும். செழிப்போடும் இந்த இயற்கை வளங்களைப் பெற்றுக் கொண்டோமோ அவ்வாறே நமது நாளைய தலைமுறையிடம் கையளிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது,




இதனாடல் குறிப்பிட்ட நபர்கள் இதனை அபகரிப்பதும், அழிப்பதும் குற்றமாகும் என்பதுடன் இவற்றை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தலான முக்கிய விடயங்களை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கனியவள அகழ்வு, காற்றாலைத்திட்டம், சட்டவிரோத மண்ணகழ்வு, இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய நுழைவு, காடழிப்பு, கடலோர கண்டல் தாவரங்கள் அழிப்பு, வனவிலங்குகள் சரணாலயத்திற்கு சொந்தமான காணிகள் தனிநபர்களினால் அபகரிக்கப்படுதல் என்பனவாகும்.

இவற்றினால் நாம் எதிர்நோக்கும் பாரிய விளைவுகள், பேரழிவுகள் பற்றி மக்கள் தெளிவடைய வேண்டும், சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு வினையமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, தொண்டு நிறுவனங்களும், சர்வதேச நிறுவனங்களும், இயற்கைவள பாதுகாப்பு செயற்பாட்டாளர்களும், இயற்கைவள சட்டவாளர்களும், பொதுமக்களும் இணைந்து செயலாற்றுவதற்கு அழைப்பு விடுகின்றோம்.

இயற்கையைப் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பு இருக்குமெனகூறிக்கொள்கின்றோம் என இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# மேச்சல் தரையும் பண்ணையாளர்களும்



இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பிரதான பேசுபொருளாக இருப்பது மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை விடயம். யுத்தம் முடிவுற்ற காலம் தொட்டு இங்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் கால்நடை வளர்ப்பாளர்கள் அயல் மாவட்ட அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களினால் மிகவும் பாதிப்பினை எதிர்நோக்கி வருகின்றார்கள். போராட்டமே வாழ்க்கையாகிப் போன தமிழர்களின் நிலைமை தமிழ் பண்ணையார்களையும் விட்டு வைக்கவில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டாலும், தமது வாழ்வாதாரத்திற்கான போராட்டத்தினை அப்பகுதியில் தினம் தினம் பண்ணையாளர்கள் முன்னெடுத்துக் கொண்டே வருகின்றார்கள்.

பாரியதொரு அரசியல், சமய பின்புலத்துடன் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து தங்கள் கால்நடைகளையும், கால்நடை மேய்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களையும் பாதுகாப்பது பாரிய சவலானதொன்றாக இவர்கள் மத்தியில் இருந்து வருகின்றது. எத்தனையோ பேர் எத்தனையோ கள விஜயங்களை மேற்கொண்டும் இதற்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை.

2012ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாணசபையூடாக இந்த விடயத்தில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களைக் கட்டுப்படுத்தி அவர்களுக்கெதிராக வழங்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும் முடிந்திருந்தாலும். மாகாண சபை கலைந்ததன் பின்னர் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் வருகை இன்னும் பெருகியது. அதிலும் 2019ம் ஆண்டு புதிய ஜனாதிபதியின் வருகை அதனைத் தொடர்ந்து 2020ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அது வீரியம் பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்க காலத்திலேயே பண்ணையாளர்களுக்கும், அவர்களின் காலநடைகளுக்கும் அநீதிகள் பல இளைக்கப்பட்டு, கால்நடைகளும் சுட்டுக் கொல்லப்பட்டன. இது தொடர்பில் பொலிஸ், வனவள திணைக்களம், மகாவலி அதிகாரசபை என எங்கு முறைப்பாடு செய்யப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

2021ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரம், இரா.சாணக்கியன் ஆகியோரினால் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தாரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 2022.07.06ம் திகதி மயிலத்தமடுவில் அத்துமீறி குடியேறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என மகாவலி அதிகாரசபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் இதுவரை அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தங்களது கால்நடைகளுக்கான பாரம்பரியமாக மேய்ச்சற்தரையாகப் பயன்படுத்தி வரும் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரையினைக் கோரியும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தக் கோரியும் பலவாறான போராட்டங்களை மேற்கொண்ட பண்ணையாளர்கள் தற்போது தீர்வு கிடைக்கும் வரையிலான தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இப்போராட்டம் காரணமாக கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இப்பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைப்பதான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இது குறித்த பிரச்சனைக்கு எவ்விதத்தில் தீர்வாக அமையும் என்பது கேள்வியே.

தங்களின் மேய்ச்சற்தரை கோரிய அறவழிப் போராட்டத்தின் கோரிக்கையை ஜனாதிபதி அவர்கள் ஏற்று நடவடிக்கை எடுத்து உரிய தீர்வினை வழங்க வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுகோள். ஏனெனில் இந்த விடயத்தில் எந்த திணைக்களத்தின் மீதும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதே கால்நடை வளர்ப்பாளர்களின் நிலைப்பாடு.

இந்தப் பிரதேசம் மகாவலி அதிகாரசபைக்குட்பபட்டதா? வன இலாகாவிற்கு உட்பட்டதா? என்ற கேள்விகளுக்கு மத்தியிலே தீர்வு எட்டப்படுவதற்கு பல இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே மகாவலி அதிகாரசபைக்குள் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளே உள்ளடங்குகின்றன. ஏறாவூர்ப்பற்று, கோரளைப்பற்று தெற்கு, கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள காணிகள் மகாவலிக்குள் உள்வாங்கப்படுகின்றது. அதிலும் ஏறாவூர்ப்பற்றில் 1829 ஹெக்ரேயர் காணிகளையும், கோரளைப்பற்று மேற்கில் 12570 ஹெக்ரேயர் காணியும், கோரளைப்பற்று தெற்கில் 27943 ஹெக்ரேயர் காணிகளும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. இது முழுவதிலும் 3025 ஹெக்ரேயர் மேய்ச்சற் தரைக்கென்றும், 2700 ஹெக்ரேயர் நெற் பயிர்ச்செய்கைக்கும், 6712 ஹெக்ரேயர் இயற்கைத் தோட்ட செயற்பாடுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதில் 1148 ஹெக்ரேயர் மக்களைக் குடியமர்த்துவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபைக்குள் உள்வாங்கப்படுகின்ற வனவள காணிகள் 24708 ஹெக்ரேயர். இவ்வாறே மகாவலி அதிகார சபைக்குட்படுத்தப்பட்ட காணிகள் வகுக்கப்படுகின்றன.

2020.11.10ம் திகதி புற்தரைக் காணிகளை பிரதேச செயலாளர்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. இப்புற்தரைக் காணிகளை மகாவலி அதிகாரசபை கையகப்படுத்துவதற்கு முன்னர் நீர் விடப்பட்டு மிகச் செழிப்பாகவே இருந்தது.

இதில் மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் மயிலத்தமடு என்று பிரயோகிக்கும் காணியானது கோரளைப்பற்று தெற்கு மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காணிகளே. இதில் ஏறாவூர்ப்பற்றினுள் சுமார் 4000 ஏக்கர்களும், கோரளைப்பற்று தெற்கில் சுமார் 1000 ஏக்கர் காணிகளுமே பண்ணையாளர்களால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரச்சனைகள் ஏற்படுவதும் இந்த குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் தான். ஆனால், இதனை அறியாதவர்கள் சொல்வது போல் பத்தாயிரம், பதினைந்தாயிரம் ஏக்கர் என்று சொல்வதெல்லாம் பொய்யான விடயங்களாகும்.

இதனைத் தாண்டிய பகுதிகள் வனப்பகுதிகளாகும். இக்காட்டுப் பகுதிக்குள் பண்ணையாளர்கள் கால்நடைகளை மேய்ப்பதென்பது முடியாத காரியம், பாரிய காட்டுப்பகுதி, கொட்டில்கள் அமைக்க முடியாது. வன விலங்குகளின் பிரச்சனைகள் காணப்படும். இதன் காரணமாக அவர்கள் அப்பகுதிகளுக்குள் மேய்சற்தரை கேட்க முடியாது. எனவே அவர்கள் தற்போதிருக்கும் சுமார் 5000 ஏக்கர் பரப்பு கொண்ட பகுதியையே கோரி நிற்கின்றார்கள். அதே நேரம் அத்துமீறிய பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்களும் தங்கள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது இந்த 5000 ஏக்கர் காணியினுள் தான். இவ்வாறு அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இத்தனை ஏக்கர் என்றோ, இத்தனை பேர்தான் என்றோ எந்த வரையறையும் இல்லை.

நாளுக்கு நாள் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் விரிவாக்கத்திற்கு அளவு இல்லை. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ஏக்கர் அளவுகளும் இல்;லை. எழுந்தமானமாக அவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடலாம்.

**2021ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரம், இரா. சாணக்கியன் ஆகியோரினால் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தாரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 2022.07.06ம் திகதி மயிலத்தமடுவில் அத்துமீறி குடியேறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என மகாவலி அதிகாரசபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் இதுவரை அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

கால்நடை வளர்ப்புக்கும், பயிர்ச்செய்கைக்கும் நடுவில் வேலி அமைத்து பிரித்து செய்வதென்பதெல்லாம் சாத்தியப்பாடு இல்லாத ஒரு விடயம். இதில் அத்துமீறிய விவசாயிகளுக்கு காணி அளவு எவ்வளவு, எத்தனை விவசாயிகள் என்ற வரையறையைக் காண வேண்டும்.

மயிலத்தமடு பிரதேசமானது மாவட்டத்தினதும், மாகாணத்தினதும் எல்லைகளை உள்ளடக்குகின்றது. பொலனறுவை மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடையே மாதுறு ஓயா ஆறு எல்லையாக இருக்கின்றது. இதுவே கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கிடையிலான எல்லையாகவும் இருக்கின்றது. மறுபக்கம் அம்பாறை மாவட்;டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குமான எல்லை. அதுவும் ஒரு ஆற்றினூடான எல்லையாகவே இருக்கின்றது. இது மண்டானை ஆறு என்று சொல்லபப்படுகின்றது. சிங்கள இனத்தவர்கள் இதனை திக்காகல அல என்று சொல்லுகின்றார்கள்.

இந்த மண்டானை ஆற்றினை கிழக்குப் பக்கம் இருந்து பார்க்கும் போது இந்த ஆற்றின் வலது பக்கம் மட்டக்களப்பு மாவட்டம் இடது பக்கம் இருப்பது அம்பாறை மாவட்டம். இந்த ஆற்றின் இடது பக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதே பெரும்பான்மையினத்தவரால் திவுல்பொத்தான என்று சொல்லப்படும் கிராமம். திவுல் பொத்தான என்று சொல்லப்படும் கிராமம் அம்பாறை மாவட்டத்திற்குரியது. அது மட்டக்ளப்பு மாவட்டத்திற்குள் இருப்பதான எந்த ஒரு ஆவணமும் இல்லை. இது அம்பாறை மாவட்டத்திற்குள் இருந்த கிராமம்.



இவ்வாறாக அந்த அம்பாறை பகுதிக்குள் பல்லாயிரம் ஏக்கர் அளவில் பரந்த காடு அற்ற பகுதி இருக்கின்றது. இதற்குள் எவரும் பயிர்செய்கையில் ஈடுபடுவதில்லை. இதேவேளை கால்நடை வளர்ப்பாளர்களும் மாடுகளை அப்பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப் போவதும் இல்லை. ஏனெனில் ஆற்றைக் கடந்து அவர்கள் செல்லப் போவதில்லை. அது வேறு மாவட்டம், வேறு காட்டுப் பகுதி, வேறு மாவட்ட வனஇலாகா பகுதி. இதனால் அங்கு மாடுகளை மேய்ப்பதற்குச் சாத்தியம் இல்லை.

எனவே பண்ணையாளர்கள் மாடுகளை மேய்க்கும் சுமார் ஐந்தாயிரம் ஏக்கரினுள்ளும் பண்ணையாளர் சங்கத்தின் கணக்கின் பிரகாரம் 972 பண்ணையாளர்களும் சுமார் இரண்டரை இலட்சம் கால்நடைகளை மேய்ப்பதாகவே சொல்லுகின்றார்கள். தற்போது அந்த மேய்ச்சற்தரை என்பது தனியவே ஏறாவூர்ப்பற்றுக்குரிய பண்ணையாளர்கள் மாத்திரம் மாடுகள் மேய்க்கும் இடமும் அல்ல. இதில் கோரளைப்பற்று, கோரளையப்பற்று மேற்கு, ஆயித்தியமலை, வவுணதீவு என்ற அனைத்து இடங்களிலும் உள்ள பண்ணையாளர்களும் மேய்க்கலாம். இதே வேளை அம்பாறை, பொலனறுவை மாவட்ட பண்ணையாளர்களும் கால்நடை மேய்ப்பில் ஈடுபடுகின்றார்கள். இதில் எந்தவொரு இன வேறுபாடும் இல்லாமல் மேய்ச்சற்தரையாக பாவித்துக் கொள்ளலாம்.

இதேநேரம் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் நெல் உற்பத்தியில் மூன்றாவது மாவட்டமாகத் திகழ்கின்றது. தற்போது விதைப்பு காலம் இந்த நேரத்தில் பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை வயல் பகுதிகளில் இருந்து அகற்றாமல் விடுவார்களாக இருந்தால் பண்ணையாளர்களுக்கும், மாவட்ட விவசாயிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும். கால்நடைகள் பயிர்களை அழிக்கும். அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இது தொடர்பான முறைப்பாடுகள் அதிகமாகப் பதிவாகும். கிரான், வந்தாறுமூலை கரடியனாறு, வவுணதீவு போன்ற கமநல நிலையங்களுக்குட்பட்ட வயற் பிரதேசங்களுக்கு இத்தகு கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்பு இடம்பெறும்.

இதற்கும் மேலாக முறையான முறையில் மேய்ச்சற் தரை வழங்கப்படாததன் காரணத்தினாலேயே பண்ணையாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பால் உற்பத்திகளின் அளவு குறைந்து காணப்படுகின்றது. இவர்களுக்கு சரியான முறையில் மேய்ச்சற் தரையினைக் கொடுத்தால் கால்நடைகள் மூலம் அவர்களின் பால் உற்பத்திகளை தற்போதுள்ள அளவை விட மேலும் பல மடங்கு அதிகரிக்க முடியும். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் நூறு வீத இறைச்சித் தேவை மற்றும், அயல் மாவட்டங்களான அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களின் இறைச்சித் தேவையினையும் இதன் மூலம் நிவர்த்திக்க முடியும்.

தற்போது கால்நடைகளுக்கான மேய்ச்சற் தரையைக் கொடுத்து கால்நடைகளை உரிய இடத்திற்கு அனுப்பாமல் விடின் மாவட்டத்தின் நெல் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும். மயிலத்தமடுவில் அத்துமீறிச் செய்கை பண்ணும் உற்பத்தியின் அளைவை விட மாவட்டத்தின் உற்பத்தி அளவு பல மடங்கு அதிகமாகும். எனவே ஒரு பாதிப்பு ஏற்படும்போது மயிலத்தமடு அத்துமீறிய செய்கையாளர்களின் உற்பத்தியை விட எத்தனையோ மடங்கு பாதிப்பினை இங்குள்ள விவசாயிகள் அனுபவிப்பார்கள்.

எனவே மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்செய்கையாளர்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படின் அது கால்நடைகள் வளர்ப்பாளர்களுக்கு மாத்திரமல்ல மாவட்டத்தின் விவசாயச் செய்கையிலும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும். இங்கு ஏற்படுத்தப்படும் பாதிப்பினை விட மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி அளவு மிக மிக குறைவாகும். இதே நேரம் மாடுகளை மேய்க்கக் கூடிய மேட்டு நில வசதியும் மயிலத்தமடுவிலேயே இருக்கின்றது. காட்டுக்குள் சென்று மாடுகளை மேய்க்க முடியாது. காட்டுக்குள் இலைகள் இருக்கும் புல் இருக்காது. இலைகளை மாடுகள் அதிகம் சாப்பிடாது.

மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்கள் காலத்துக்கு வருவதும் போவதுமே பிரச்சனை. அதிலும் சுமார் பதினைந்து இருபது குடும்பங்கள் மட்டில் நிரந்தரமாக அங்கு இருக்கின்றார்கள். இவர்களின் ஊடாக ஐந்தில் இருந்து இருநூறாக மாறி தற்போது ஆயிரத்தில் வந்து நிற்கின்றது. இதுவே கடந்த இரண்டு வருடங்களுக்குள் இடம்பெற்றது. கடந்த 2020ல் அவர்கள் இறுதியாக பயிர்செய்த எல்லை தொப்பில்கல் மலை எல்லையாகும். அது வன இலாகாவிற்குச் சொந்தமானது. இவ்வாறான நிலைமைகளில் அங்கு பயிர்ச்செய்கையும் செய்யலாம், கால்நடைகளும் வளர்க்கலாம் என்பது சாத்தியமில்லாத விடயம்.

இப்பகுதியானது 1930 காலப்பகுதிகளில் வன இலாகாவிற்கு உரித்தானதாக சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 1978களின் பின்னர் மகாவலிச் சட்டம் வந்ததும் வன இலாகாவிற்குரிய பகுதிகளை மகாவலி அதிகார சபைக்குள் உள்ளெடுத்து சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாவலி சட்டத்தின் படி இப்;பகுதிகளில் வன இலாகாவின் சட்டம் வலுவற்றதாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நடைமுறைகளுக்கு மத்தியில் பண்ணையாளர்கள் தங்களின் கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தினைக் கோரி தற்போது 20 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள். இவர்களுக்கான தீர்வு கிடைக்குமா என்ற கேள்விகளும், ஏக்கங்களும் பண்ணையாளர்களுக்கு மாத்திரமல்லாமல் மாவட்டத்தின் ஒவ்வொரு குடிமகனுக்கு எழுந்திருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் மூன்ற அரசியல்வாதிகளும், தேசியம் சார்ந்த இரண்டு அரசியல்வாதிகளும் இது தொடர்பில் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும், பண்;ணையாளர்களுக்கான தீர்வு இன்றுவரைக்கும் எட்;டப்படவில்லை. எது எவ்வாறாக இருந்தாலும் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயிகளும் சேர்ந்தே இந்தப் பிரச்சனையினூடாகப் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

எனவே இந்தப் பண்ணையாளர்களின் பிரச்சனைக்கு ஜனாதிபதி உட்பட அரசாகம் ஒரு தீர்க்கமான முடிவினை வழங்காமல் விட்டால் கிழக்கில் பொருளாதார அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயிகள், கால்நடை பண்ணையாளர்கள் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்குள் முகங்கொடுத்து அது மாகாணத்தின் மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரத்திலும் பாரியதொரு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதே உண்மை.

**சசி புண்ணியமூர்த்தி**

# 1987 அக்டோபர் 10 அமைதியின் அஸ்தமனம்!

# நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி தகர்ப்பு

1987 அக்டோபர் 10ஆம் அதிகாலை வேளை, தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம், தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச்சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரி நாளாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29 இல் கைச்சானதின் பின்னர், ஈழத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்தை முடக்க உருவாக்கும் வகையில், நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி நிலையங்களின் தகர்ப்பு அழிப்பு நிகழ்ந்தது.

1987 ஐப்பசி 10ம் நாள் காலை அமைதிப்படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ் தினசரிப் பத்திரிகைகளான ஈழமுரசு, முரசொலி காரியாலயங்களுக்குள் புகுந்து, பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர்.



**இந்திய அமைதிப் படை போர்:**

இந்தியப் அமைதிப் படை 1987 அக்டோபர் 10 ஆம் நாள் விடுதலைப் புலிகளிற்கெதிராகப் போரைப் பிரகடனம் செய்து தமிழரிற்கெதிரான போரினை நடத்தியது. போரில் இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்தியது.

அத்துடன் ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் போன்ற ஊடகங்களை தகர்த்தொழித்து தமிழர்கள் மீதான போர் பற்றிய செய்திகள் வெளியே வராமல் பார்த்துக் கொண்டது இந்திய அமைதிப் படை.

ஊடகம் என்பது மக்கள் ஜனநாயகத்தின் முக்கிய தூண். மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் உள்ள இடைவேளையில் கண்ணாடி போல நின்று அனைத்து செய்திகளையும் உலகிற்குச் சொல்லும் மிகப்பெரிய சாதனம் இந்த ஊடகங்களே.

**நவீனன்**

இந்தியா என்கிற மிகப்பெரிய ஜனநாயக நாடு, உலகின் நான்காம் இராணுவத்தை கொண்ட நாடு, மக்கள் தொகையில் இரண்டாம் இடம் கொண்டுள்ள நாடு. அத்தகைய நாட்டில் ஊடகம் எத்தகைய செயல்பாடுகள் செய்ய வேண்டுமோ, அதற்கு சற்றும் தொடர்பில்லாத செயல்பாடுகளை இந்தியா ஈழத்தில் செய்தது.

ஈழத்தில் ஊடகம் என்பது தமிழரின் நிலைப்பாட்டைப் பொருத்தவரை உண்மைகளை முடக்கும் முகமானதாகவும், உண்மை நிலைக்கு மாறான பரப்புரைகளை நிகழ்த்துவோருக்கு சுதந்திரமானதாகவுமே நீண்ட காலமாக இருக்கின்றது. உண்மைச் செய்திகளைத் திரட்டி வெளியிட மறுப்பதை அல்லது தடுப்பதை ஊடக முடக்கம் எனலாம். ஊடக முடக்கம் செய்யப்படும் போது ஊடகச் சுதந்திரமும் அந்நாட்டில் அற்றுப் போய் விடுகின்றது என்பதும் உண்மையே.

**ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை:**

இந்திய அமைதிப் படைகளின் ஊடகப் போரை, இக்கோர நிகழ்வை சாட்சியப்படுத்தும் வகையில், ஈழமுரசு பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூல் வரலாற்றுச் சான்றாக விளங்குகிறது.

இந்திய அமைதிப் படைகளால் சிறைவைக்கப்பட்டிருந்த போது, எழுதிய எஸ்.எம். ஜி இன் சிறைக்குறிப்புகள், தமிழ்நாட்டில் ஜூனியர் விகடன் இதழில் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற தலைப்பில் தொடராக வெளியாகி பெரும் பரபரப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவை தாய் நாடு என்றும், இலங்கையினை சேய் நாடு என்றும் அழைத்து வந்த காலங்கள் இந்தியப்படையினரின் இப்படிப்பட்ட அநாகரியமான செயலினால், இந்திய அரசின் சுயநல நோக்கத்திற்காக ஈழ மக்களினை பல துன்பியலுக்கு உட்படுத்தப்பட்டதனை எம் தமிழ் இனத்தின் சிந்தனையில் இருந்து ஒரு போதும் அழித்து விட முடியாது என்பதே நிதர்சண உண்மையாகும் என எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதி காப்பதற்காகவும், ஈழ தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இச்சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிவாக ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நூல் அமையப் பெற்றுள்ளது.

ஈழத்தில் தமிழர்களால் நடாத்தப்படும் ஊடகங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாகி வருகின்றது. ஊடகவியலாளர்கள் கைது, காணாமல் போதல், கொலைச் செய்யப்படல் போன்றவை தொடர்கின்றன.

பல ஊடகவியலாளர்கள் கொலைச் செய்யப்பட்டும் உள்ளனர். கொலை செய்யப்பட்ட இலங்கையின் ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இதனால் பல ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறி உள்ளனர்.

தாயகத்தில் உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு ஊடகச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதோடு, கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் இன்னமும் உள்ளன. உண்மை நிலைப்பாடுகளை மக்களுக்கு அறியத்தர முற்படும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

**முரசொலி பத்திரிகை தகர்ப்பு:**


முரசொலி ஆசிரிய தலையங்கங்கள் (இதயநாதம்), திலீபனின் உண்ணா விரதக் கோரிக்கைகளை வலியுறுத்தியதாகவும் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியதாகவும் இருந்தது. திலீபனுக்கு ஏதாவது நடந்தால் இந்தியாவே பொறுப்பு என எழுதப்பட்ட தலையங்கம் மீது இந்தியத் தூதுவர் கொண்டிருந்த கோபம் கலந்த விசனத்தை முரசொலிப் பத்திரிகையின் ஸ்தாபகரும் முதன்மை ஆசிரியராகவுமிருந்த திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் பதிவிட்டுள்ளார்.

1987 அக்டோபர் 9ஆம் திகதி இந்தியாவின் அன்றைய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த கே.சி.பந்த் திடீரென கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அமைச்சர் அத்துலத் முதலி உட்பட சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பை நிகழ்த்திவிட்டு அன்றிரவே இந்தியா திரும்பினார். அன்று நள்ளிரவை அண்மிக்கும் வேளையில் கொழும்பிலுள்ள ஆங்கிலப் பத்திரிகையொன்றின் ஆசிரியரான நண்பர் ஒருவர் முக்கியமான தகவலொன்றை தொலைபேசியூடாகத் தெரிவித்தார். மறுநாள் பத்தாம் திகதி வடக்கில் ஊரடங்கு பிறப்பிக்கப்படும். விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு இரத்தாகும், இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்துப் பிடிப்பதற்காக அல்லது கொலை செய்வதற்காக பொதுமக்களை வீடுகளிலிருந்து வெளியேற்றும் என்று அவர் தந்த தகவல் பிரத்தியேகமான ஒரு செய்தியாகத் தெரிந்தது. அக்டோபர் 10ஆம் திகதி முரசொலியின் முன்பக்கத் தலைப்பு செய்தியாக இதனை வாசகர்கள் புரியும் வகையில் பூடகமாக எழுதியிருந்தேன் என திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் இக்கட்டுரையில் விபரித்துள்ளார்.

முதல் நாளிரவு கொழும்புப்பத்திரிகை நண்பர் தந்த தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. ஆனால், அடுத்த சில நிமிடங்களில் முரசொலி அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது என்ற செய்தி என்னை வந்து சேர்ந்தது. எது வாயிருந்தாலும் தாங்கிக் கொள்வதென்ற மனநிலையில் அலுவலகத்துக்குச் சென்றபோது மிகப்பெரிய கூட்டம் அங்கு நின்றது. மூன்றுமாடிக் கட்டிடத்தின் கண்ணாடிகளும் தளபாடங்களும் ஸ்ரான்லி வீதியில் சிதறிக் கிடந்தன. நிலப்பகுதியில் அமைந்திருந்த அச்சகம் நிர்மூலமாகியிருந்தது. ஒரு சில ஊழியர்கள் மட்டும் வெளியில் அச்சத்துடன் நின்றனர். தொடர் வாகன அணியில் வந்த இந்திய இராணுவத்தினர் அங்கிருந்த அச்சகப் பிரிவு ஊழியர்களை வெளியேற்றிவிட்டு உள்நுழைந்து அச்சு இயந்திரங்களுக்குள் குண்டுகளை வைத்து தங்கள் கைங்கரியத்தை நிறைவேற்றியதை அவர்கள் கலங்கியவாறு தெரிவித்தனர்.

ஆல் இந்திய ரேடியோவின் மாநிலச் செய்தியும், டில்லிச் செய்தியும் இந்தக் குண்டுத் தாக்குதல் பற்றி ஒலிபரப்பிய செய்தி விநோதமானது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முரசொலி, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளை இந்திய இராணுவம் இன்று காலை முடக்கியது என்று அந்தச் செய்தியறிக்கையில் சொல்லப்பட்டது.

குண்டினால் தகர்ப்பது என்பதை இந்திய ஊடக மொழிநடையில் முடக்குவது' என்று சொல்வது என்பதை அன்றுதான் நான் அறிந்து கொண்டேன். இராணுவம் பத்திரிகை நிறுவனங்களை தகர்த்ததை விட, அதனை மூடி மறைத்து 'முடக்கப்பட்டது' என்று செய்தி வழங்கிய இந்திய வானொலியின் ஊடக (சு)தந்திரமே எனக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.




அக்டோபர் 10 முதல் 21ஆம் திகதி வரையான நாட்கள் கொழும்பில் 9ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவின்படி எதுவுமே தவறாது இடம்பெற்றன. குடாநாடு இந்திய இராணுவத்தின் குண்டு மழையாலும் வேட்டு மழையாலும் நனைந்து பிளந்தநாட்கள் இவை. இலட்சோபலட்சம் மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைக்குள் தன்னை இந்திய இராணுவத்தின் 'விருந்தினராக' தடுத்து வைத்திருந்த வேளையில், அதன் தளபதி பிரிகேடியர் மஞ்சித் சிங்கிடமும், தினசரி தன்னைச் சந்தித்த கப்டன் சுரேஷிடமும் நான் கேட்ட ஒரேயொரு கேள்வி, ஏன் முரசொலி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது? என்பதுவே. எவருமே இதற்கான பதிலை இதுவரை கூறவில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடெனக் கூறப்படும் இந்தியாவும், உலகின் நான்காவது பெரிய இராணுவம் எனக் கூறிக் கொள்ளும் அந்நாட்டு இராணுவமும் தமிழர் தாயகத்தில் தங்கள்வரம்பு மீற எல்லை கடந்து ஊடக சுதந்திரத்தைஅராஜகக் கரங்களால் முறித்த சம்பவங்களுக்கு இதுவரை உரிமை கோரவுமில்லை, அதற்கான நஸ்டஈடு வழங்கவுமில்லை எனவும் முரசொலிப் பத்திரிகையின் ஸ்தாபகரும் முதன்மை ஆசிரியராகவுமிருந்த திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் பதிவிட்டுள்ளார்.

**இந்தியச் சிறையில் ஈழமுரசு, முரசொலி ஆசிரியர்கள்:**

இந்தியச் சிறையில் விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களுடன், ஈழமுரசு, முரசொலி பத்திரிகையின் ஆசிரியரும் கைது செய்யப்பட்டனர்.

முக்கியமான வேதனைக்குரிய ஒரு விடயம் என்னவென்றால் இலங்கை இராணுவத்தினால் அமைக்கப்பட்ட 'பூசா' தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பலரும் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டது, மட்டுமல்லாது பல கஷ்டங்களையும் சந்தித்தனர் என்பதனை நேரில் பார்த்த பல வேதனையினை 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' எனும் நூல் விபரிக்கின்றது.

இலங்கை தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம் அவர்களது எதிர் நோக்கும் உண்மையானப் பிரச்சினைகளை, வாழ்வியல் நிலைப்பாட்டு உண்மைகளை வெளிக்கொணர்வதில் பாரிய ஆபத்துகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ் ஊடகங்களின் செய்தி சேகரிப்புக்கு ஊடக முடக்கம் இன்னமும் தொடர்கின்ற இவ்வேளையில், அரசுக்கு சார்பான, உண்மைகளை மறைக்கும் மறிதலிக்கும் ஊடகங்களுக்கோ முழு சுதந்திரம் கிடைத்துள்ளது.

போர்க் காலத்தில் அரச ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரின் ஆயுத முனையில், அப்பப்போது சில செய்திகளை தமிழ் மக்கள் வாயாலேயே சொல்ல வைத்து, அவற்றைக் காட்சிப்படுத்தி உண்மைக்கு மாறான பொய் பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர். தமிழ்ப் பகுதியில் தனி நபர் துஷ்பிரயோகம், படுகொலை, சித்திரவதை, பாலியல் வன்முறை என்று எவ்வளவு பல இன்னல்களை அனுபவித்திருக்கிறது.

ஆனால் அந்தப் போர்க்கால கட்டத்திலும், அதற்குப் பின்னான காலப்பகுதியிலும் இந்தத் துன்பியல் வரலாறுகள் முறையாகப் பதியப்படவில்லை என்பது வருத்தத்தற்குரியதாகும்.

**ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம்:**

1987 அக்டொபர் 10ம் நாள் இந்தியா ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான தனது யுத்தத்தை ஆரம்பித்து விட்டது என்று தெரிவித்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜீ.ஆருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார். இச்செய்தி கூட வெளி உலகிற்கு தெரிய விடாமல் இந்தியப் படைகளால் நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி போன்ற ஊடகங்கள் தகர்த்து அழிக்கப்பட்டன.

தமிழ் மக்களின் எந்தக் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் வெளியுலகம் அறியமுடியாதவாறு ஊடக முடக்கம் இந்தியப் படைகளால் தொடர்ந்தது.

இது உண்மைகளை அறிவிக்கும் ஊடகங்களின் ஊடகச் சுதந்திரம் அற்ற நிலையை உருவாக்கியது.

அப்பாவித் தமிழ் மக்கள் வாய் பேசா ஊமைகளாக மௌனிகளாக இந்தியப் படைகளின் போர்க் காலத்தில் வாழத் தலைப்பட்டனர். இராணுவ இயந்திரத்தின் கட்டுப் பாட்டில் தமிழ் மக்களின் குரல் எப்படி வெளிவரும்? அவர்களின் அபிலாசைகள் எங்கேயும் எப்பொழுதும் வெளிவராமல் தடுக்கப்பட்டன. ஆயினும் வியட்நாம் போரின் போது 1974-ஆம் ஆண்டு போர்க்களத்தில், பாஹ்ன் திகிம் என்ற வியட்நாம் சிறுமி ஒருவள் உடலில் தீக் காயங்களோடு நிர்வாணமாக ஓடி வரும் அந்த ஒரு காட்சி உலகையே உறைய வைத்தது. அந்தப்படம் போருக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட பேருதவி செய்தது. அதனை செய்ததும் இதே போன்ற ஊடகங்கள்தான்.

இதற்கு ஒப்பாகவே ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்தித் துன்பியல் வன்முறைக் களத்தினை விபரிக்கும் சாட்சியமாக, மிக முக்கியமானதொரு ஆவணமாக உள்ளது.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 32

# சீனடிக் கலையின் முது கலைஞர் கலாபூஷணம் எச்.எம்.முஹமட் அலி கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

இலங்கை முஸ்லிம்களிடத்தில் பரவலாக காணப்பட்ட பாரம்பரிய கலைகளில் சீனடிக் கலையும் ஒன்றாகும். நாட்டின் பல பாகங்களிலும் இக் கலை பரவலாக இருந்தாலும் திருகோணமலை மாவட்டம் குறிப்பாக கிண்ணியா பிரதேசமே இதற்குப் பெயர் பெற்றதாகும் என வரலாறுகள் கூறுகின்றன. சீனடிக் கலை தனித்துவமானதொரு தற்காப்புக் கலையாகும். கைகளையும், கால்களையும் உபயோகித்து எதிரியின் தாக்குதலிருந்து தப்புவதோடு, அவனை அடித்து வீழ்த்துவதற்கான நுட்பங்களையும், ஏராளமான யுக்திகளையும் கொண்ட கலையாகவே சீனடி சமூகத்தில் அடையாளம் கொள்ளப்படுகிறது.

அந்த வகையில், இஸ்லாமியரின் பாரம்பரியக் கலையான சீனடிக் கலைத்துறையில் புகழ்பெற்ற கலைஞர்களுள் ஒருவரான இவர் திருகோணமலை மாவட்டத்தின் இயற்கை எழில் கொண்ட கிண்ணியா பிரதேசத்தில் 1949ஆம் ஆண்டு ஹபீப் முகமட், சுல்தான் பீபி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர். விவசாயத்தை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு தற்போது முள்ளிப்பொத்தானையில் வசித்து வருகின்றார்.

சிறுவயது முதல் பாரம்பரியக் கலைகளான சீனடி, சிலம்படி, கத்திச்சண்டை, குத்துச்சண்டை என்பவற்றில் ஏற்பட்ட ஆர்வத்தினாலும், தனது பரம்பரையின் வழி மூலமாகவும் கலை விளையாட்டினை தனது  தந்தையிடம் முறைப்படி கற்றுத் தேர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் பாரம்பரிய கலை, கலாசார போட்டிகளிலும், இஸ்லாமிய நிகழ்வுகளிலும் தனக்கான மேடை வாய்ப்புகளாக அமைத்துக் கொண்டு, பெரும்பாலான போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று அனைவராலும் பாராட்டையும் பெற்றவர். அந்த வரிசையில் 1978ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றதுடன் அவ் வருட கண்டி பெரஹராவில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. இவ்வாறு கலையின் மீது கொண்ட பற்றாலும், சீனடிக் கலையினை அழியாமல் பாதுகாத்து அதன் தனித்துவத்தை எதிர்கால சந்ததியினர் அறிந்து பயிற்சியினை பெறுவதற்காகவும் தனது முயற்சியால் 2005ஆம் ஆண்டு 'தர்ஹா சீனடி குத்துச்சண்டை கலாசார விளையாட்டு மன்றத்தை முள்ளிப் பொத்தானையில் முதன்முதலாக உருவாக்கி

மன்றம் மூலமாக பல மாணவர்களை இணைத்து, பயிற்சிகளைக் கொடுத்து பல கலைச் செயற்பாடுகளை திருகோணமலை மண்ணில் முன்னெடுத்ததோடு மட்டுமல்லாமல் பல்வேறு போட்டிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடுவதற்கான பயிற்சியாளராக இருந்தவர். இம் மன்றமானது வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருந்ததோடு முள்ளிப்பொத்தானையின் கலைக்கூடமாக திகழ்ந்தமை பதிவிடக் கூடிய விடயமாகும்.

இவரின் கலைச் சேவையானது இன்று வரையில், தம்பலகாமம் பிரதேச செயலத்தினால் நடாத்தப்படும் கலை கலாசார நிகழ்வுகளில் பங்களிப்பினை வழங்குவதோடு, தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் பிரதேச கலாசார அதிகார சபையில் உறுப்பினராகவும், செயலகத்தினால் வெளியிடப்படும் 'ஏர்முனை' நூலின் மலர்க்குழு அங்கத்தவராகவும், நூலிற்கு ஆக்கப் படைப்பையும் வழங்கி வருகின்றார்.

இவ்வாறாக சமூகத்திற்கு கலைச் சேவையினை தொடர்ந்து ஆற்றி வந்த இவர் அரசியல் சார்ந்த சேவையையும் ஆற்றத் தவறவில்லை. 1988 ஆம் ஆண்டு அரசியல் பிரவேசமாக, தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளராக பதவி வகித்து இன, மத, மொழி வேறுபாடின்றிய சேவைகளையும், கலை, கலாசார, கல்வி மற்றும் விளையாட்டுக்கான சேவைகளையும் ஏழு வருடங்களாக ஆற்றி அரசியலில் இருந்து ஓய்வுப் பெற்றவர்.

சீனடிக் கலைஞராக மட்டுமன்றி இலக்கிய ஆர்வலராக, சமூகத் தொண்டராக, பேச்சாளராக எனப் பல ஆளுமைகளைக்  கொண்டு தான் வாழும் இடத்தை பெருமை சேர்த்து, பாரம்பரிய சீனடிக் கலையை அழிந்து விடாமல் பாதுகாக்கும் வகையில் அயராது உழைத்து, இளம் சமுதாயத்தினர் கலையை கற்பதற்கு பாலமாக பயணித்து 50வருடங்களுக்கு மேலான காத்திரமான கலைச் சேவையினை ஆற்றி வந்த முதுகலைஞர் கலாபூஷணம் எச்.எம்.முஹமட் அலி கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை'என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணல் இங்கு எமது வாசகர்களுக்காக....



**சீனடிக் கலையை கற்பதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டதெனக் கூறுவீர்களா?**

ஆரம்பக் காலங்களில் சீனடி விளையாட்டின் பார்வையாளனாகவே நானும் இருந்தேன். என் தந்தை வழியாகவே இக்கலை எனக்கு அறிமுகமானது. அதன் வழியாக ஏற்பட்ட ஆர்வத்தில் தந்தையிடம் முழுமையாக கற்று நானும், எனது சகோதரர்களும் பாடசாலை நேரங்கள், மார்க்கக் கல்வி கற்கும் நேரங்கள் தவிர்த்து ஏனைய நேரங்களில் சீனடிக் கலையில் ஈடுபட்டோம். அதன் பின்பு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் எல்லாம் சீனடிக் கலையைத் தொடர்ந்து செய்து வந்தேன். கலாசார நிகழ்வுகளிலும், போட்டிகளிலும் கலந்து கொண்டு அனைவராலும் பாராட்டைப் பெற்று கலைக்கான வரவேற்பையும் பெற்றேன்.

**சீனடிக் கலையின் முதல் அரங்கப் பிரவேசம் குறித்து கூறுவீர்களா?**

1970ஆம் ஆண்டு எனது 21 ஆவது வயதில், முள்ளிப் பொத்தானை சிங்கள மகா வித்தியாலயத்தில் நடந்தேறிய போட்டியில் கலந்து கொண்டமையே சீனடிக் கலையின் எனது முதல் அரங்கப் பிரவேசமாகும். அத்துடன் அப்போட்டியில் முதலிடத்தையும் பெற்றுக் கொண்டேன்.

**இலங்கையில் சீனடிக் கலையின் அறிமுக வரலாறு குறித்து பகிர்ந்து கொள்வீர்களா?**

எமது முன்னோர்கள் எமக்களித்த மிகச் சிறந்த பாரம்பரிய கலைகளுள் சீனடிக் கலை முதன்மை இடம் வகிக்கின்றது. சீனப்பட்டுப் பாதையின் ஊடாக பிரயாணித்து இலங்கை வந்தடைந்த அரேபிய வர்த்தகர்களே; அதிலும் குறிப்பாக கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர்களே இதனை இலங்கைக்கு அறிமுகம் செய்தனர். இலங்கையின் கரையோர பகுதியை ஆண்ட போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டளவில் முஸ்லிம்கள் அனைவரையும் துரத்தியடித்தமையால், இலங்கையை ஆண்ட செனரத் மன்னனின் அடைக்கலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் குடியேறி வியாபாரத்தை மேற்கொண்டனர். பின்னர் 1626இல் கிழக்குப் பகுதியின் கொட்டியாரக் குடாவில் ஒரு பகுதியினரும், தம்பலகாமத்தின் முள்ளியாவளையில் மற்றுமொரு கூட்டத்தினரும், கிண்ணியாவிலும் சென்று வாழத் தொடங்கினர். அக்காலத்தில் யானைப் பாகன்கள் தொடர்ந்து தம்பலகாமப் பகுதியில் இருந்து யானைகளை கிண்ணியாவிற்கு எடுத்துச் சென்று யானை மடுப்பகுதியில் வைத்து யானைகளை சுத்தம் செய்து விற்கும் வியாபாரத்தினை மேற்கொண்டனர். இவ்வாறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பணிக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இயல்பாகவே அஞ்சா நெஞ்சம் கொண்டவர்களாகவும், வீரத்தில் திளைத்தவர்களாகவும் இருந்ததோடு பரம்பரை வழியின் ஊடாக சீனடி தொடர்பான அறிவையும் கொண்டிருந்தனர். பின்னர் கிண்ணியாவில் ஏற்பட்ட திருமணத் தொடர்புகளால் சிறிது காலம் கிண்ணியாவில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தாலும், 1954ஆம் ஆண்டு முதல் கௌரவ பிரதமராக இருந்த டி.எஸ்.சேனாநாயக்க அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற திட்டத்தின் ஊடாக மீண்டும் முள்ளிப்பொத்தானை, சிராஜ் நகர், தம்பலகாமப் பகுதியில் மீளக் குடியேறினர். இவ்வாறு குடியேறியவர்கள் விவசாயத்தை தங்களது வாழ்வாதாரத் தொழிலாக செய்து வந்ததுடன் இராக் காலங்களில் தங்கள் மனமகிழ்ச்சிக்காகவும், உடற் பலத்திற்காகவும் சீனடி விளையாட்டில் ஈடுபட்டு வந்தமையே இதன் வரலாறு ஆகும். அக்காலப் பகுதியில் இருந்து இன்று வரை பல தனித்துவமான வரலாற்று நிகழ்வுகளை சுமந்து கொண்டு வளர்ந்த தனிப் பெருங்கலையாக சீனடிக்கலை காணப்படுகின்றது.

**கலையினூடாக நீங்கள் மேடையேறிய நிகழ்வுகள் குறித்தும், மேடையேற்றிய நிகழ்ச்சிகள் குறித்தும் கூறுவீர்களா?**

பெரும்பாலான மேடை நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளேன். அவற்றில் திருகோணமலை நகர சபை மற்றும் திருகோணமலை பிரதான விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்றதுடன் பல சான்றிதழ்களும், பாராட்டுதல்களும் அளவின்றி கிடைத்தன. 1978இல் நடைபெற்ற போட்டியில் அகில இலங்கையில் முதலிடம் பெற்றதுடன் அவ்வருட கண்டி பெரஹராவில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. தொடர்ந்து 1985இல் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன நவசங்கீத நிகழ்ச்சியின் நேர்காணலிலும், 2008இல் இலங்கை முஸ்லிம் சேவையின் நேர்காணலிலும் சீனடிக் கலை தொடர்பான விடயங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து சில காலம் அரசியல் பிரவேசத்துடனான மக்கள் பணியில் ஈடுபட வேண்டியேற்பட்ட நிலையிலும் இக்கலையைப் பற்றிய கண்ணோட்டமும், என்னலைகளும் குறையவில்லை. என்னிடம் கற்ற மாணவர்கள் 2004ஆம் ஆண்டில் வடகிழக்கு மாகாண மீலாதுன் நபி விழாவில் கலந்துகொண்டு முதலிடம் பெற்றனர். திறந்தவெளி சீனடி, சிலம்படி, குத்துச்சண்டை முதலிய போட்டிகளுக்கு மாணவர்களை பயிற்றுவித்து முதலிடங்களைப் பெறச் செய்தேன். அன்று மாணவர்களின் மேடை அரங்கேற்றத்தை அவதானித்த மறைந்த மாமனிதர் மர்ஹூம் மருதூர் மஜீத் அவர்கள் கலை பற்றி புகழ்ந்து பேசியதோடு, அவரின் உதவியோடு 'தர்ஹா சீனடி குத்துச்சண்டை கலை, கலாசார விளையாட்டு மன்றம் என்ற சங்கத்தினை என்னால் உருவாக்க முடிந்தது. இதனூடாக இக் கலையினை மாணவர்களுக்கு பயிற்றுவித்து பல வகையான போட்டிகளிலும் பங்குபெறச் செய்து கலை செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தேன். ஆயினும் இன்று எனது உடல்நிலை காரணத்தால் மன்றத்தினை தொடர்ந்து கொண்டு செல்ல முடியாத நிலைக்கு சென்று விட்டமை வேதனைக்குரிய விடயமே!

**சீனடி விளையாட்டின் ஆரம்பப் பகுதி குறித்து கூறுவீர்களா?**

சீனடியின் ஆரம்பம் சலாம் வரிசை எனப்படும். இதுவே விளையாட்டின் துவக்கம் எனலாம். பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன் தன் குருவையும், பயிற்சி செய்யும் இடத்தையும் கண்ணியம் செய்வதற்கு இவ் விளையாட்டு செய்யப்படும். இதனைத் தொடர்ந்து 12 பிரதான உபபிரிவுகள் கொண்ட சீனடிக்கலை உள்ளது.

**கலையினூடாக மறக்க முடியாத தருணம் ஏதேனும் உண்டா?**

2013ஆம் ஆண்டு கிண்ணியாவில் நடந்த அகில இலங்கை தேசிய மீலாதுன் நபி விழா நிகழ்ச்சியில் நடந்த நேர்காணலில் எனது சீனடி விளையாட்டினை செய்து காட்டி விளக்கம் அளித்தது என்றும் என் நினைவுகளில் மறக்க முடியாத தருணமாகும்.

**சீனடிக் கலையின் அனுபவம் பற்றி பகிர்ந்து கொள்வீர்களா?**

2015.04.24ஆம் ஆண்டில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் பின்னர் ஒரு வருட காலம் படுத்த படுக்கையாய் இருந்து பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து மீண்டு வர வேண்டிய காலங்களில் எல்லாம் எனக்கு உரமூட்டும் அருமருந்தாய் சீனடிக் கலை  இருந்தது என்பது அனுபவ வாயிலாக நான் கண்ட உண்மையாகும். இச்சந்தர்ப்பத்தில் சீனடியின் மருத்துவ குணங்களைப் பற்றி பலவாறு சிந்தித்தேன். உண்மையில் இக்கலை மனதிற்கு அமைதியை, எழுச்சியை, புத்துணர்வை, புத்தாக்க சிந்தனைகளை ஏற்படுத்தும் மிகச் சிறந்த மருந்தாகவும், மனதிற்கு எல்லையற்ற

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 32

# சீனடிக் கலையின் முது கலைஞர் கலாபூஷணம் எச்.எம்.முஹமட் அலி கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

நம்பிக்கையை விதைக்கும் சாதனமாகவும் திகழ்கின்றது.

**? திருகோணமலையின் பாரம்பரிய கலைகளின் அண்மைக் காலப் போக்கு குறித்து கூறுவீர்களா?**

எமது திருகோணமலை மாவட்டமானது பழம்பெறுங் கலைகளை தனித்துவத்துடன் தன்னகத்தே கொண்ட மாவட்டமாகும். இன்றைய சூழலில் பாரம்பரிய கலைகளின் போக்கானது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது. காரணம் நவநாகரிக வளர்ச்சியே ஆகும். ஒரு இனத்தின் அடையாளமே வழிவழியாக பின்பற்றி வரும் பண்பாட்டுக் கோலங்களிலே தங்கி உள்ளது. பண்பாட்டுக் கோலங்களின் உள்ளடக்கமே நமது பாரம்பரியம். ஒவ்வொரு பாரம்பரியமும் ஒவ்வொரு சமூகத்திற்கான வரலாற்றை சுட்டிக் காட்டுகிறது. அதனை சிந்திக்காமல், அவை பற்றிய தேடல்கள் இல்லாமல் இருந்தால் இறுதியாய் நமது பாரம்பரியம் அனைத்தும் வரலாற்றில் இருந்து அழிந்து விடும் நிலைக்கு சென்று விடும். ஆகவே இதனை கருத்திற் கொண்டு நமது பாரம்பரியமிக்க கலைகளை பொக்கிஷமாக பேணிப் பாதுகாத்து அதன் உயிர்ப்புத் தன்மை மாறாமல் எதிர்கால சமூகத்திற்கு கையளிப்பது நம் மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனது கடமையாகும்.

**? இன்று பலரும் தற்காப்புக் கலைகளை விரும்பி கற்கின்றனர். இது பற்றி உங்களது கருத்து?**

உடலையும், உள்ளத்தையும் வளப்படுத்த உதவும் கருவியான தற்காப்பு கலைகளைப் பயில்வதென்பது நம்மையும், நம் சமுதாயத்தையும் மேம்படுத்தும். இன்றைய காலகட்டத்தில் தற்காப்புக் கலை பாரம்பரிய கலைகளில் ஒன்றாக இருந்தாலும் நவீனக்கலை விளையாட்டாகவே உலகளவில் வடிவம் பெற்றுள்ளது. அவை ஜுடோ, கராத்தே, குங்ஃபூ, டேக்வாண்டோ என்றவாறு அமைகின்றது. இவை பெயரளவில் வெவ்வேறாக இருந்தாலும் எமது பாரம்பரிய தற்காப்புக் கலை விளையாட்டுக்களின் உள்ளடக்க உப பிரிவுகளில் இருந்தே இவை தனித்தனி பெயர்களில் நவீன வடிவம் கொண்டன எனலாம். ஆரம்ப காலங்களில் பாதுகாத்து கொள்வதற்கு கலைகள் உருவெடுத்தாலும் இவைகளில் சில இன்று பிரதான விளையாட்டுக்களாகவே விளையாடப்பட்டு வருகின்றன. எது எவ்வாறாக இருந்தாலும் அவற்றின் உயிரோட்டத்தை மாற்றாமல் கொண்டு செல்லுங்கள் என்பதே எனது கருத்து.



**? உங்களது கலை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லப்படுகின்றதா?**

எனக்குப் பின் இக்கலையின் தொடர்ச்சி அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படவில்லை. எனக்கு இரண்டும் பெண் பிள்ளைகள். அவர்களின் தொழில், குடும்பச் சூழ்நிலை. ஆயினும் என்னால் முடிந்த கலைச் சேவையினை எமது மண்ணுக்கு ஆற்றியுள்ளேன் என்று நினைக்கிறேன். எனது மன்றத்தின் மூலமாக பல மாணவர்களை உருவாக்கியுள்ளேன். அவர்கள் யார் மூலமாகவும் கலை உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளேன்.

**? கலைத்துறையில் பெற்ற விருதுகள் குறித்து கூறமுடியுமா?**

2014ஆம் ஆண்டில் கலாபூஷண அரச விருதும், அதே ஆண்டில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் பிரதேச சாஹித்திய விருதும் கிடைக்கப் பெற்றுள்ளன.

**? நிறைவாக, வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

ஒவ்வொரு கலையானது வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. கலைகளே வரலாற்றைப் பேசும் சக்தி கொண்டவை. அப்படிப்பட்ட கலைகளில் எமது மக்களின் அடையாளத்தை பறைசாற்றுவன பாரம்பரியமிக்க கலைகளே! நவீனமயமாக்கலினால் எமது பாரம்பரியமிக்க கலைகள் அழியும் விளிம்புக்கு சென்று கொண்டிருக்கின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வூட்டலையும், பாரம்பரிய கலைகள் மீதான ஆர்வத்தை துண்டச் செய்வதன் மூலமாகவும் எமது பாரம்பரிய கலைகளை அழிந்துவிடாமல் எதிர்கால சமூகத்திற்கு கொண்டு சேர்க்க முடியும். இதன் பொறுப்பு இளந்தலைமுறையினரான உங்களுக்கே!

அந்த வகையில், எம் போன்ற கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!



இனம், மதம், வர்க்கம், மொழி, பிரதேசம் கடந்து, இருப்பின் முக்கியத்துவத்தை தாங்கி நிற்பது பாரம்பரியக் கலைகளே! ஒவ்வொரு சமூகத்திற்கென்றும் ஒவ்வொரு தனித்துவமான கலைகளைக் கொண்ட அடையாளம் பேசப்பட்டு வருகிறது. அதன் வகையில் இலங்கை முஸ்லிம்களிடத்தே காணப்படும் பாரம்பரிய கலைகளுள் சீனடிக்கலையும் ஒன்றாகும். இன்றைய நவீன கால சூழ்நிலையில் உலக அரங்கில் நமக்கான, நம் நாட்டுக்கான ஒரு இடத்தை உறுதி செய்து கொள்ள எமது பாரம்பரியக் கலைகளின் வரலாற்றைப் பாதுகாத்து இக்கலைகளின் இருப்பைக் காத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது இன்றைய சமுதாயத்தினரின் பொறுப்பாகும். இதனூடாக எம் மூத்த கலைஞர்களின் மனத் தாக்கங்களை நீக்குவதோடு அவர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய முடியும் என்பது எனது கருத்தாகும்.

அவ்வகையில், சீனடிக் கலை மூலமாக திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்திப்பதோடு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**
**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

# இந்தியா தமிழர்களுக்கு முழு ஆதரவினையும் வழங்க வேண்டும்

## முன்னாள் எம்.பி சரவணபவன் வேண்டுகோள்

**(த.சுபேசன்)**

இந்தியாவின் அரண் தமிழர்கள் தான் இனியாவது எங்களுக்காக குரல் கொடுங்கள். இந்த நாட்டின் நீதியை நிலைநாட்டும் நீதிபதி ஒருவர் வெளியேறிய பின்னரும் ஏன் மௌனம் காக்கின்றீர்கள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் -இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் தாவடிப் பகுதியில் இடம்பெற்ற தாச்சிச் சுற்று போட்டியொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எமது நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார். ஒரு நாட்டினை விட்டு நீதிபதி வெளியேறுகின்றார் என்றால் சாதாரண மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கப் போகின்றது?

இதற்கான முழுப் பொறுப்பினையும் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசாங்கமோ அல்லது நீதி அமைச்சோ இதுவரை இதற்கு காரணமாக இருக்கின்ற தரப்பிற்க்கு எதிராகவும் ஒரு நடவடிக்கையைக் கூட முன்னெடுக்கவில்லை.

இலங்கையில் பணியாற்றும் அனைத்து நீதிபதிகளினதும் தீர்ப்புக்களுக்கும் இந்த அரசாங்கம் வழி வகுத்துக் கொடுக்க வேண்டும். ஒருவருடைய தீர்ப்பின் மீது நம்பிக்கை இல்லாவிடில் அடுத்த கட்டத்திற்கு நகரலாம் .அதைவிடுத்து இவ்வாறான ஜனநாயக ரீதியான முறைகளை விடுத்து பலவந்தமாக இந்த பெரும்பான்மையினம் சிந்திக்கின்றது. எதனையும் செய்யலாம், தமிழ் மக்களை விரட்டி தாங்கள் வாழலாம், தமிழ் மக்களின் எந்தவிதமான கூட்டும் தேவையில்லை என்று நினைக்கின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு தமிழ் மக்களுடைய வாக்குகள் தேவையில்லை என்பதனை கூறி வென்றும் காட்டினரோ அதே பாணிக்கு தற்போதைய ஜனாதிபதி செல்வதாக தெரிகிறது . அவருடைய ஒவ்வொரு செவ்வியை பார்த்தாலும் இது புலப்படுகிறது. உதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அழைத்து தன்னுடைய நியாயங்களை சொல்கிறாரே தவிர அவர்களுடைய நியாயங்களை கேட்பதாக இல்லை. அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்? இதனை சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டு பேசாமல் தான் இருக்கின்றது.



நிச்சயமாக இந்தியா விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். வேறு யாராலும் அது முடியாது. நிச்சயமாக பெரும்பான்மை இனம் என்றைக்கும் இந்தியாவிற்கு சார்பாக வரமாட்டார்கள் என்பதனை எடுத்துக் கூறுகின்றேன். இந்தியாவிற்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றேன் இங்கே உங்களுக்கு சார்பாக முதலில் இருக்கக்கூடியவர்கள் தமிழர்கள் தான். பின்பு தான் மற்றவர்கள். இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுக்கு ஒரு நீதி நியாயமான வழி பிறக்க வேண்டும். எங்களுக்கு இருந்த பாதுகாப்பு இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டுடன் மௌனிக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின்னர் தாங்கள் நினைத்தவாறு பெரும்பான்மை இனத்தவர்கள் பேசுகின்றார்கள். தமிழர்களை துச்சமாக மதிக்கின்றார்கள். தமிழர்களின் நிலையை மிக கேவலப்படுத்துகின்றார்கள். இந்தியாவில் தமிழகம் நமக்காக நிற்கின்றது. ஆனால் முழு இந்தியாவும் நமக்காக நிற்கின்ற பொழுது தான் நாங்களும் அவர்களுக்கான முழு ஆதரவினையும் வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 5 ஆம் தர புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இவ் கருத்தரங்கு

**(க.ருத்திரன்)**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திகிலிவெட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இலங்கை பாதுகாப்புப் படையணி கிழக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன அவர்களின் வழிகாட்டலில் 23 ஆவது படையணியின் மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன அவர்களின் மேற்பார்வையின் கீழ் 232 ஆவது படையணிக்குரிய 12 அவது இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் இந்னுமொரு அங்கமாக 2023 இல் 5 ஆம் தர புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள 18 பாடசாலைகளை உள்ளடக்கிய 119 மாணவர்களுக்கு இவ் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு வளமான நாட்டின் எதிர்காலம் குழந்தைகளுக்கு அவர்களின் அறிவு திறமை மற்றும் அணுகு முறைகளை வளர்ப்பதன் மூலம் நல்லதொரு நாட்டினை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும்.





மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளையும் உள்ளடக்கியதான பல வித சமூகப்பாதுகாப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தபட்டு வருகிறது.

அந்த வகையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல்,சகல பரீட்சைகளையும் இலக்காக் கொண்டு கருத்தரங்கு நடாத்துதல் மது ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடாத்துதல், விளையாட்டு போட்டிகள் நடாத்துதல்,உலக சிறுவர் தினம் போன்ற சர்வதேச வேலைத் திட்டங்களை நடாத்துதல் மற்றும் பாடசாலை பாடங்கள் உள்ளடங்கும் விதமாக பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துதல் போன்ற விடயங்கள் திட்டபிடப்பட்டுள்ளது.

இதில் ஒரு அங்கமாக கல்குடா கல்வி வலயத்தில் காணப்படும் கஷ்ட பிரதேச பாடசாலைகளில் 18 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இக் கருத்தரங்கு இன்று மாணவர் மத்தியில நடாத்தப்பட்டு வருகிறது.

இன்றைய நிகழ்வில் சிவில் சமூக செயற்பாட்டு அதிகாரி லெப்ரினட் கேணல் வி.எம்.இந்துனில் பாலசூர்யா, 12 ஆவது இலங்கை தேசிய படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் சந்தன வன்னிநாயக்க, திகிலிவெட்டை பாடசாலை அதிபர் ஏ.பாலமுரளிதன், ஆசிரிய ஆலோசகர்கள் திருமதி கனகரெத்தினம், மற்றும் திருமதி அருளேந்திரன் ஆகியோர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விஜயம்




















# திருமலையில் சிறுபான்மைக்கு தீர்வில்லாத நில ஆக்கிரமிப்பு

**காணி பிரச்சினை மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பௌத்த பிக்குகள் ஒரு இடத்தில் போராட்டம் செய்தார்கள் சில இடங்களில் சிறுபான்மை அரசியல்வாதிகள் பொது மக்கள் என இலுப்பைக்குள விகாரை கட்டுமான பணியின் போது வீதிமறியல் போராட்டங்களும் இடம் பெற்றுள்ளன. சட்டரீதியான தடை உத்தரவு கிழக்கு மாகாண ஆளுனரின் தடை உத்தரவு என கூறப்பட்ட போதிலும் அதையும் மீறி விகாரை கட்டிடப்பணி விகாரைக்கான பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது கூட்டத்தை குழப்பிய தேரர் உடன் கலைந்து சென்ற ஆளுனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலவரமும் அண்மைக் காலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது**

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

சிறுபான்மை இன மக்களின் பூர்வீக நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டே வருகிறது.திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் இந்த நிலவரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அண்மையில் அரிசி மலை விகாரைக்கு அண்மித்த பகுதியில் பௌத்த மதகுரு ஒருவரினால் பூஜா பூமி என்ற அடிப்படையிலும் தொல் பொருள் என்ற போர்வையில் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

அரிசிமலை விகாரையை அண்மித்த பல ஏக்கர் நிலங்கள் தனியார் மக்களுக்கு சொந்தமான விவசாய காணியாகும் இவர்களின் வாழ்வாதாரம் மீன் பிடி விவசாயம் சேனை பயிர்ச் செய்கை என ஜீவனோபாயமாக காணப்படுகிறது .

அப்பாவி மக்களின் காணிக்குள் அடாத்தாக கையகப்படுத்த முனையும் பௌத்த பிக்குகளை யாரும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு போகின்றது.

ஏழை மக்களின் காணிகளை அதுவும் சிறுபான்மை சமூகத்தினரின் காணிகளே கபளீகரம் செய்கின்றனர். பூஜா பூமி,தொல்பொருள் திணைக்களத்தின் மூலமான வர்த்தமானி அறிவித்தல் என மக்கள் காணிகளை அவர்களது விவசாய பூர்விக நிலங்களை கையகப்படுத்த முனைகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்புக்கள் அம் மக்களுக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருவதில்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். தேர்தல் காலங்களில் வாக்கு கேட்பதற்காக வரும் அரசியல் தலைமைகள் அரசியல்வாதிகள் காணி பிரச்சினை என்றால் வருவதில்லை வெறுமென அறிக்கைகளை மாத்திரமே விடுகிறார்கள் செயலில் காட்டுவதில்லை தீர்வில்லாமல் வாழ்க்கை தொடர்கிறது எனவும் தெரிவிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகளாக வாக்கு போட்டு நாடாளுமன்றம் அனுப்பிய மக்களை இவர்கள் கவனிப்பதில்லை பிரச்சினைக்கான தீர்வு இல்லாமல் திருகோணமலை மாவட்ட சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவது வருத்தமளிக்கிறது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் கூட பங்கேற்காத நிலையில் காணப்படுகிறார்கள். சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு வருகின்றன பெரும்பான்மை இன மக்கள் யாருமே இல்லாத இடத்தில் பௌத்த விகாரை அமைக்கவும் சிலை வைக்கவும் முயற்சிக்கின்ற பௌத்த மதகுருக்கள் மூலமாக மக்களுக்கான தொடர் பிரச்சினையாக இலுப்பைக்குளம் பகுதியிலும் நடந்தேறுகிறது.



எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நிலப் பிரச்சினைகள் தீர்வதில்லை. விவசாய நிலங்கள் மக்கள் காணிகள் அடாத்தாக கையகப்படுத்த முனைகின்றனர். இதன் மூலமாக நல்லிணக்கம் நாட்டில் சீர்குழைக்கப்படுகிறது. கிண்ணியா பிரதேசத்தில் உள்ள குரங்குபாஞ்சான் பகுதிதில் பௌத்த மதகுரு தலைமையில் ஐவர் அடங்கிய குழு அங்கு சென்றதனால் பதற்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது தனியாருக்கு சொந்தமான நிலத்தில் இவர்கள் ஏன் செல்ல வேண்டும் புதையல் தோண்டவா? அல்லது வேறு நடவடிக்கைக்காக என ஒட்டு மொத்தமாக பார்த்தால் காணி கபளீகரம் செய்ய வந்திருப்பார்கள் எல்லை கற்களை இடுவார்கள் என்ற அச்ச நிலை குடியிருப்பாளர்களிடத்தில் ஏற்பட்டுள்ளது.

இது போன்ற காணி பிரச்சினை மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பௌத்த பிக்குகள் ஒரு இடத்தில் போராட்டம் செய்தார்கள் சில இடங்களில் சிறுபான்மை அரசியல்வாதிகள் பொது மக்கள் என இலுப்பைக்குள விகாரை கட்டுமான பணியின் போது வீதிமறியல் போராட்டங்களும் இடம் பெற்றுள்ளன. சட்டரீதியான தடை உத்தரவு கிழக்கு மாகாண ஆளுனரின் தடை உத்தரவு என கூறப்பட்ட போதிலும் அதையும் மீறி விகாரை கட்டிடப்பணி விகாரைக்கான பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது கூட்டத்தை குழப்பிய தேரர் உடன் கலைந்து சென்ற ஆளுனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலவரமும் அண்மைக் காலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது .இருந்த போதிலும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு சிறுபான்மை சமூகத்துக்கு நீதிமன்றம் ஊடான தடையும் இலுப்பைக்குள விவகாரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்து அவர்களின் கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இருக்கும் பொது இவ் விடயங்கள் கண்டிக்கத்தக்கது.

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டு அப்பாவி பொதுமக்கள் புத்த பிக்கு தரப்பினரால் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ், முஸ்லீம், மக்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.




திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நில அபகரிப்புக்கள் அதிகரித்து காணப்படுகின்றது. விகாரைகள் என்ற பெயரில் தமிழ் முஸ்லீம் மக்களின் வரலாற்றை மாற்றியமைக்கும் வகையில் குடியிருப்புக்களுக்கு மத்தியில் விகாரைகள் அமைக்கப்படுகின்றது. அதே நேரம் எல்லை கிராமங்களில் வயல் நிலங்கள் குடியேற்றங்கள் என்ற பெயரில் அபகரிக்கப்படுகின்றது

புல்மோட்டை பகுதியிலும் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான வயல்நிலங்கள் புத்தபிக்குகளினால் 'பூஜா பூமி' என்றபெயரில் ஆக்கிரமிக்கபட்டுள்ளது அங்கு முஸ்லீம் விவசாயிகள் மற்றும் பெண்கள் காட்டுமிராண்டி தனமாக தாக்கப்பட்டுள்ளனர். இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறேன். திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்டு இனக்கலவரத்தை தூண்டும் வகையில் இனவாத செயற்பாடுகள் அதிகரித்தவன்னம் உள்ளது அரச இயந்திரமும் பாதுகாப்பு தரப்பினரும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருப்பது தமிழ், முஸ்லீம் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

புல்மோட்டையில் ஆக்கிரமிக்கபடும் விவசாய நிலங்கள் மக்களிடம் மீள வழங்கப்படவேண்டும். திட்டமிட்டு தமிழ், முஸ்லீம் மக்கள் மீது நடத்தப்படும் இனக்குரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் ஸ்ரீபிரசாத் தெரிவித்துள்ளார்.

அன்றாடம் உழைத்து தங்களது ஜீவனாம்சத்தை கழிக்கும் மக்களின் துயர் துடைக்க யாருமின்றி கண்ணீர் வடிக்கின்றனர். அத்துமீறி தனியார் காணிக்குள் நுழைய இவர்களுக்கு சண்டித்தன அதிகார போக்கை வழங்கியது யார் என்பதே கேள்வியாக உள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் இந்த பிரச்சினை தொடராக இருக்கிறது குறிப்பாக சிறுபான்மை சமூகம் வாழும் பகுதிகளில் இது தொடர்கின்றன. இந்த நிலை இன்றி மக்கள் அன்றாட வாழ்வாதாரமாக விவசாயம் மீன் பிடியை நிம்மதியாக செய்து வாழ வேண்டும் அவர்களது காணிக்குள் சுதந்திரமாக பயிர்களை செய்து வாழ வேண்டும் எந்த தடையோ தொல்பொருள் திணைக்களத்தின் தலையீடோ பௌத்த மதஸ்தலங்களை அமைப்பதோ,புத்தர் சிலை வைப்பதோ என்ற பிரச்சினை வராமல் நிம்மதியாக வாழ வழி விட்டுக் கொடுக்க வேண்டும்.

தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிப்பதை நிறுத்த வேண்டும் இதற்கான நிலையான தீர்வினை உரிய தரப்புக்கள் முன்வைக்க வேண்டும் என மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.





சின்னத்தம்பி குருபரனின் இலங்கையின் நிலைபேறற்ற அரசியல் போக்குகளும் சமூக, வபாருளாதாரத் தாக்கங்களும் என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு 06.10.2023 காலை 9.05 மணிக்கு ஆரம்பமாகி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திருகோணமலை ,உவர்மலை, வில்லா ப ஹொட்டலில் பேராதனைப் பல்கலைக்கழகக் கல்விசார் பிரதம நூலகர் கலாநிதி.இ.மகேஸ்வரன் தலைமையில், ஓய்வு நிலை இலங்கை நிர்வாக சிரேஷ்ட உத்தியோகத்தர்

கலாநிதி.சி.அமலநாதன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) திரு.ஏ.விஜயானந்தமூர்த்தியும் ஓய்வு நிலை உபபீடாதிபதி வவுனியா தேசிய கல்வியி

வெளியிட உதவி இருந்தார். அவர் வெளியீட்டு உரையினைச் சுவாரசியமாகத் தனது வாசிப்பின் அனுபவத்தை வெளிப்படுத்தும் வகையில் பல நறுக்கான கவிதைகளை ஆதாரங்காட்டிச் சபையோரை மகிழ்வித்துப் பாராட்டினையும் பெற்றார். நுலாசிரியரும் பதிப்பாசிரியரும் இணைந்து பிரதம அதிதிக்கு நூலின் முதல் பிரதியினை வழங்கி வெளியிட்டு வைத்தனர். பிரதம அதிதி மற்றும் ஏனைய அதிதிகளுமாகச் சகலருக்கும் நூல்களை வழங்கிக் கௌரவித்தனர்.

பொருளியல் துறைச் சிறப்புப் பட்டதாரியும் பகழ்பெற்ற பொருளியல் ஆசிரியருமான திரு மனோகரன் பொருளாதாரத்தில் தனக்குள்ள புலமையை அடிப்படையாகக் கொண்டும் கல்வித் துறையில் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டும் மிக ஆளமான, ஆணித்

அரசியல் ஈடுபாடும் ஆய்வுமுறை எழுத்தும் கொண்ட தனக்குத் தெரியொத பல விடயங்கள் ஆய்வு பூர்வமான தகவல்களாக இருப்பதை விதந்துரைத்து, தன்னுனடய விமர்சனத்தைக் காத்திரமாகவும் கனதியாகவும் முன்வைத்தார். நூலாசிரியரின் கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ந்து வாசிப்பதாகவும் வரலாற்று ரீதியாகப் பல விடயங்களை அணுகி இருப்பது சிறப்பாகும். அரசுக்கெதிரான போராட்டங்கள், அரசியல் நெருக்கடிகள், அதனால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்கள், இந்நிய மணிப்பூர் கலவரம், சமகால யுத்தங்கள் போன்ற விடயங்கள் இரண்டு அத்தியாயங்களில் 20 கட்டுரைகளின் ஊடாக விபரிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் யாவற்றையும் வாசிப்பது பயனுடையதாக அமையும் எனக் கூறி ஆய்வினை நிறைவு செய்தார். இரண்டு ஆய்வாளர்

திரு குமாரகுலசிங்கம் அவர்களின் முத்துக்குமாரு வடிவேலு நினைவு நிதியத்தையும் பாராட்டினார். இவரைப்போல் பலர் முன்வந்து மறைந்து கிடக்கும் ஆக்கங்களைத் தொகுத்து வெளியிட முன்வர வேண்டும். அத்தோடு ''இந்நூல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உசாத்துணையாகச் சிபார்சு செய்யப்பட வேண்டிய நூல் என்க் கூறியதோடு இன்றுள்ள அரசியல்வாதிகள் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் என்று கூறியதோடு இந்நூல் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணம் என்றும் கிழக்கு மாகாண இரட்னடப் புலவர்கள் (செட்டி பாளையம்) புலமைத்துவம் மிக்கவர்கள், அவர்களுடைய ஆக்கங்கனள நூலுருக் கொண்டு வராமையால் இன்று பலருக்கு அவர்கனளத் தெரியாமல் போன தூரதிஷ்டத்னதச் சுட்டிக் காட்டி இவ்வாறான நூல்களின் அவசியத்னத எடுத்துக் கூறினார்.

# சின்னத்தம்பி குருபரனின் இலங்கையின் நிலைபேறற்ற அரசியல் போக்குகளும் சமூக, வபாருளாதாரத் தாக்கங்களும் நூல் வெளியீடு




யல் கல்லூரி திரு.ந.பார்த்தீபனும் கௌரவ அதிதியாக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அமைச்சு திருகோணமலை) திரு.சி.வரதசீலனும் கலந்து சிறப்பித்தனர்.

நூல் வெளியீட்டின்போது மிகவும் முக்கியமானது நூலாய்வு. உண்மையில் நூலில் என்ன?, எப்படி இருக்கிறதெனபதை கோடிட்டுக் காட்டுவது நூலாய்வே. நூலை வாசிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவது. அந்த வகையில் ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) திரு.சி.மனோகரன், ஊடகவியலாளர் திருமலை நவம் ஆகியோர் மிகக் கச்சிதமாகச் செய்து சபையோரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர்.

ஒரு நிகழ்ச்சி விறுவிறுப்பாக அமையக் காரணமாக இருப்பவர் நிகழ்ச்சித் தொகுப்பாளர். அப்பணியினை ஓய்வுநிலை அதிபரும் கவிஞருமான திரு க. யோகானந்தன் கச்சிதமாகத் தொகுத்து வழங்கி நிகழ்வைச் சிறப்பித்தார். அழைப்பிதழில் இல்லாத ஓரிரு விடயங்கள் சேர்க்கப்பட்டுக் கால, நேரத்தைக் கருத்தில் கொண்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

வரவேற்பு உரையினை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (மூதூர் கல்வி வலயம்) திரு.உதயகுமார் நிகழ்த்தினார். தலைமை உரையில் கலாநிதி மகேஸ்வரன் இன்று வெறிவரும் பல நூல்கள் இதணு ச்ணஞ் ணீச்ண்ணனு முறையில் பல நூல்கள் வெளிவருவதாகவும் நூலாசிரியர் குருபரன் தனது சுய தேடலின் மூலம் விமர்சனப் பார்வையில் உள்ளதை உள்ளபடி துணிச்சலுடன் எழுதி பத்திரிகைகள், சஞ்சிகைளில் வெளிவந்த 40 கட்டுரைகளைத் தொகுத்து நூலுருவாக்கி இருக்கின்றார். பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இக்கட்டுரைகள் மிகப் பெறுமதி வாய்ந்த ஆவணமாக அமையும் எனக் கூறித் தனது தலைமை உரையை நிறைவு செய்தார்.

இந்நூல் வெளியீட்டுக்குக் காரணமான திரு வடிவேலு குமாரகுலசிங்கம் (லண்டன்) தனது தந்தையின் ஞாபகார்த்மாக முத்துக்குமாரு வடிவேலு நினைவு நிதியத்தின் ஊடாகப் பதிப்பித்து

தரமான ஆய்வுரையொன்றை முன்வைத்தார். நாட்டின் தற்போதைய சமூக, பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம், கட்டண ஏற்றம், பணவீக்கம், உள்நாட்டு உற்பத்தி பாதிப்பு, இறக்குமதித் தடை, எரிபொருள், எரிவாயு, மின்சார



நெருக்கடி, தொழில் துறை பாதிப்பு, வேலை இழப்பு, வருமானமின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வறுமை, வாழ்க்கைத்தர வீழ்ச்சி, கல்வி, சுகாதாரம் உட்படச் சேவைகள் துறை பாதிப்பு என நாட்டின் சமகால நெருக்கடி நிலையைச் சுட்டிக்காட்டி இந்த விடயங்கள் யாவும் கட்டுரைகளில் புள்ளி விபரங்களோடு விரிவாக அலசப்பட்டிருக்கின்றன. இதனைத் தனக்கேயுரிய பாணியில் எல்லோரையும் கவரும் வகையில் முன்வைத்தமை பாராட்டுக்குரியது.

நாடறிந்த ஊடகவியலாளரும் ஆக்க இலக்கியவாதியும், வரலாற்று ஆய்வாளரும், அரசியல் விமர்சகருமான திருமனல நவம் அவர்கள் தனக்கு முன்பின் நேரடிப் பழக்கமில்லாத போதும் தன்னன அழைத்தமைக்குக் காரணம் தனது கட்டுனரகளின் நொக்கும் போக்குமாக இருக்கலாமென்றும்

களும் கூறியது கூறல், கட்டுரை வைப்பு முறை, சரவை பார்த்தல், வரலாற்றுச் சம்பவங்களின் காலம் என்பவற்றிலும் ஆசிரியர் கவனம் செலுத்தி இருக்கலாம் எனவும் கூறினார்கள்.

ஆய்வாளர் மனோகரன் கூறுகையில் 'இக்கட்டு

ரைகள் அவ்வப்போது பத்திரினக, சஞ்சினககளில் வெளிவந்த காரணத்தினால் கட்டுரைகளில் ஒரு சில இடங்களில் கூறியது கூறல் தவிர்க்க முடியொதது என்று கூறினொர். ஆனால் நூலுருவாக்கம் பெறும்போது ஆசிரியர் அதில் கவனம் செலுத்தி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் எனக் குறிப்பிட்டதோடு இனிமேல் இத்தகைய தவறுகள் இடம் பெறாதிருக்கக் கவனம் செலுத்துமாறு ஆலோசனை கூறினார்.

சிறப்பு விருந்தினர்களும் கௌரவ விருந்தினரும் நூலாசிரியரையும் நூலையும் பற்றி வாழ்த்திப் பேசியதோடு பாராட்டும் தெரிவித்தனர். காலத்துக்கு ஏற்ற பொருத்தமான நூல் எனவும் கூறினார்கள்.

பிரதம அதிதி தனது உரையில் நூலாசிரியரையும் இந்நூல் வெளியீட்டுக்குக் காரணமாக இருந்த

ஏற்புரையை வழங்கிய நூலாசிரியர் 'இன்று சர்வதேச ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த பலர் கூடீயிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இன்றைய தினத்தில் இந்நூல் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறானவர்களை அழைத்துக் கௌரவிக்கக் கிடைத்தமை பேருவகை தருகிறது. 20 நாட்களுககுள் அவசர அவசரமாக நூலை வெளியிட வேண்டி இருந்தமையால் ஓரிரு தவறுகள் இடம்பெற்றுள்ளன. கால அவகாசம் இருந்திருந்தால அவற்றைத் தவிர்த்திருக்கலாம். இதேபோல் இன்னும் ஏழு நூல்கள் நிதிப் பிரச்சினை காரணமாக வெளிவராதிருக்கின்றன. இந்நூல் வெளிவருவதற்கு உதவிய சகலருக்கும் நன்றி கூறி' ஏற்புரையை நிறைவு செய்தார். ஓய்வுநிலை அதிபர் திரு.வ.மதிபாலசிங்கத்தின் காத்த்திரமான நன்றியுரையுடன் நூல் வெளியீட்டு விழா இனிதே நிறைவுற்றது.

உண்மையில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த சிறப்பான, பயனுள்ள நூல் வெளியீட்டு விழா என்றும், இவ்வாறான நூல்கள் வெளியிடப்பட்டுச் சகல மக்களும் முற்போக்கான சிந்தனை, செயற்பாடுகளிலும் வாசிப்பிலும் ஈடுபாடு காட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

**ந. பார்த்தீபன்,**
**உப பீடாதிபதி, வவுனியா தேசிய கல்விக் கல்லூரி,**
**(பசுமை, பல்சுவைச் சஞ்சிகை ஆசிரியர்)**

